Enhancing Reliability
ඉහළ විශ්වාසනීයත්වයක් උදෙසා
நம்பகத்தன்மையை மேம்படுத்தல

Sri Lanka Accounting and Auditing Standards Monitoring Board

2025

ஆண்டறிக்கை



இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை

உள்ளடக்கம்

பிரிவு 1	தவிசாளரின் மீளாய்வு	1
பிரிவு 2	பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு	2
பிரிவு 3	நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு	3
பிரிவு 4	செயற்பாட்டுச் சூழல்	21
பிரிவு 5	செயலாற்றுகை முன்நோக்கு	23
பிரிவு 6	சேவை வழங்கல் முடிவுகள்	46
பிரிவு 7	நிதி செயலாற்றுகை	48
பிரிவு 8	மனித வளங்கள் மற்றும் நிறுவனத் திறன	52
பிரிவு 9	ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்	55
பிரிவு 10	முக்கிய சவால்கள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள்	62
பிரிவு 11	அடுத்த ஆண்டுகளுக்கான திட்டங்கள்	63
பிரிவு 12	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	65
பிரிவு 13	தலைமை கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளின் தற்போதைய நிலை	70
பிரிவு 14	பின்னிணைப்புகள்	84

தவிசாளரின் மீளாய்வு

கால் நூற்றாண்டாக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (சபை), குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில் முயற்சிகளில் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நிமயங்களுடனான இணங்குவித்தலை கண்காணிப்பதற்கு ஏக சுயாதீன ஒழுங்குமுறைப்படுத்துனர் பொறுப்பாக பணியாற்றியுள்ளது. இப்பொறுப்புடமையானது நிதி அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மையினை வலுப்படுத்தி, இதனூடாக இலங்கை நிதியியல் உறுதிப்பாடு, சந்தை நம்பிக்கை மற்றும் இலங்கை பொருளாதாரத்தின் வினைத்திறன்மிக்க தொழிற்பாடு என்பவற்றுக்கு ஆதரவளிப்பதில் நிலையமாக இருந்து வருகின்றது.

செயலாற்றல் மற்றும் முக்கிய சாதனைகள் பற்றிய மீளாய்வு

2025 ஆம் காலப்பகுதியில் சபை, சவால்மிக்க பொருளாதார மற்றும் தொழிற்பாட்டு சூழலில் அதன் நியதிச்சட்ட பொறுப்பாணையை தொடர்ந்தும் நிறைவேற்றியது. நிறுவனத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் பரீட்சிப்பு செயற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில்முயற்சிகள் மத்தியியில் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுடனான மேம்பட்ட இணங்குவித்தலுக்கு பங்களித்து, முதலீட்டாளர்கள், கடன்வழங்குனர்கள். ஒருங்குமுறைப்படுத்துனர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் மூலம் பயன்படுத்தப்படும் நிதி தகவல்களின் நம்பகத்தன்மைக்கு ஆதரவளித்தது. இதன் பயனாக தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதை ஊக்குவித்து, தகவல் இடர்நேர்வுகளை குறைத்து நிதி முறைமையில் நம்பிக்கையினை மீள வலுப்படுத்துவதன் மூலம் இது பொருளாதாரத்திற்கு பெறுமதியினை சேர்த்தது.

மீளாய்வாண்டு காலப்பகுதியில் முக்கிய சாதனைகளானவை நிலையான பரீட்சிப்புகளை நிறைவேற்றுதல். கண்காணித்தல் நிகழ்ச்சிதிட்டங்கள், ஒருங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்கள் கணக்காய்வாளர்களுடன் மேம்பட்ட ஈடுபாடு மற்றும் உள்ளக ஆளுகை மற்றும் மேற்பார்வை செயன்முறைகளுக்கான தொடர்சியான மேம்படுத்தல்கள் என்பவற்றை உள்ளடக்கி இருந்தன. மிகவும் கவனம் செலுத்தப்பட்ட இடர்நேர்வு - அடிப்படையிலமைந்த பரீட்சிப்புக்கள், மேம்பட்ட ஒருங்குமுறைப்படுத்தல் தலையீட்டு காலவரையறைகள் மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆர்வலர்களுடனான சிறந்த ஒருங்கிணைப்பு என்பவற்றினூடாக சேவை வழங்கல் வலுப்படுத்தப்பட்டது. மூலவள தடைகளுக்கு மத்தியில், சபை அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் வெளியீடுகளின் தரத்தினையும் ஒத்திசைவினையும் பேணியது.

ஆளுகை, சவால்கள் மற்றும் நிறுவனசார் அபிவிருத்தி

சபையானது ஆண்டுமுழுவதும் முனைப்புடன் ஈடுபட்டு, கிரமமான கூட்டங்கள், செயலாற்ற மீளாய்வுகள் மற்றும் உபாய ரீதியான பரிசீலனைகள் என்பன ஊடாக மேற்பார்வையினை வழங்கியது. போட்டிமிக்க சந்தையொன்றில் தொழில்நுட்ப ரீதியாக தேர்ச்சிபெற்ற ஆளணியினரை கவருதல் மற்றும் தக்கவைத்தல் என்பன மூலவள வரையறைகளை முகாமைசெய்கின்ற அதேவேளை பரீட்சிப்பு தரத்தினை பேணுதல் என்பன முக்கிய சவால்களில் உள்ளடங்கியிருந்தன.

இதற்கு பதிலிறுத்தி, தொழில்நுட்ப ரீதியான இயலளவினை வலுப்படுத்துதல், தலைமைத்துவ வழிகாட்டல்களை உருவாக்குதல், முகாமைத்துவ தகவல் முறைமைகளை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் செயற்திறன் வாய்ந்த தன்மையினை மேம்படுத்தும் நோக்கில் சட்டவாக்க ஒழுங்கமுறைப்படுத்தல் மறுசீரமைப்பு முன்முயற்சிகளுக்கு ஆதரவளித்தல் என்பற்றை நோக்கி உபாய ரீதியான கவனம் திசைப்படுத்தப்பட்டிருந்தது.

உபாய ரீதியான எதிர்கால வாய்ப்பு நிலைபேறா தன்மை மற்றும் சமூகத் தாக்கம்

முன்நோக்கி நோக்குகையில், சபையானது அதன் ஒழுங்கு முறைப்படுத்தல் தொழிற்பாடுகளில் நிலைபெறுதன்மையை வலுப்படுத்தி சர்வதேச ரீதியாக சிறந்த நடத்தைகளுடன் அணிசேர்ந்திருப்பதை உறுதிசெய்வதற்கு அர்ப்பணித்துள்ளது. இயலளவை கட்டியெழுப்புதல். முன்மதிமிக்க தொழில்நுட்பவியலைப் பின்பற்றுதல் மற்றும் சர்வதேச தராதரம் நிர்ணயிப்பவர்களுடன் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனங்களுடன் விரிவான ஒத்துழைப்பு என்பவற்றை உபாயரீதியான முன்னுரிமைகள் உள்ளடக்குகின்றன. இம்முயற்சிகள் ஒழுங்குமுறைப்படுத்தல் வினைத்திறனை அதிகரித்து, இடர்நேர்வு அடையாளப்படுத்தலை மேம்படுத்தி, நீண்டகால நிறுவனசார் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு ஆதரவவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் பொறுப்பாணைக்கு அப்பால் சபை அதன் பரந்த சமூக தாக்கத்தினை அங்கீகரிக்கின்றது. உயர்தர நிதி அறிக்கையிடல் கணக்காய்வினை ஊக்குவிப்பதன் வாயிலாக நிலைபெறத்தக்க பொருளாதார அபிவிருத்திக்கான முக்கிய அடிப்படைகளாக காணப்படுகின்ற பொதுமக்கள் நம்பிக்கை, பொறுப்புக்கூறல் மற்றும் சிறந்த ஆளுகை என்பவற்றுக்கு நிறுவனம் பங்களிக்கின்றது. நம்பகமான நிதி தகவல்கள் மூலதன சந்தைகளுக்கு மாத்திரமன்றி அரசிறை ஒழுக்கம், பொறுப்புமிக்க நிறுவன நடத்தை மற்றும் பங்குதாரர் நம்பிக்கை உள்ளடங்கலாக பொது நலன் பெறுபேறுகளுக்கும் ஆதரவளிக்கின்றது.

நேர்மை, தொழில்சார்பண்பு மற்றும் சுயாதீனம் என்பன மீதான அதன் தொடரச்சியான கவனம் செலுத்தல் எதிர்கால சவால்களுக்கு செயல்திறன் மிக்க முறையில் எதிர்வினையாற்றுவதற்கும் பொதுநலனை பாதுகாப்பதில் அதன் வகிபாகத்தை நிலைநாட்டுவதற்கும் நிறுவனத்தை இயலச்செய்யும் என சபை (SLAASMB) நம்புகின்றது.

பாராட்டுக்கள்

ஆண்டு முழுவதும் அவர்களது அசைக்க முடியாத கடமைப்பொறுப்பு மற்றும் தொழில்சார் பண்பு என்பவற்றுக்காக SLAASMB உறுப்பினர்களுக்கும் எமது அர்ப்பணிப்பு மிக்க பதவியினருக்கும் சபை சார்பில் எனது உண்மையான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களது தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கும் நம்பிக்கைக்கும் எமது பங்குதார்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும். இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை தாக்குப்பிடிக்கத்தக்க மற்றும் செயல்திறன்மிக்க நிதிசார் நேர்மை காவலனாக இருப்பதை உறுதி செய்கின்றது என்பது அதன் கூட்டான அர்ப்பணிப்பாகும்.

.



திருமதி கே.எம்.ஏ.என் தவுலகல
தவிசாளர் - இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை
27.02.2026

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

2025 ஆம் ஆண்டானது இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபைக்கு ஒன்றுதிரட்டுகின்ற அத்துடன் முன்னோக்கி நோக்குகின்ற மாறுதலை கொண்ட முக்கிய காலப்பகுதியை அடையாளப்படுத்தியது. குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில்முயற்சிகள் மூலமான இணங்குவித்தலை மேற்பார்வை செய்யும் பணி ஒப்படைக்கப்பட்ட தேசத்தின் ஏக சுயாதீன ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற வகையில் சபை நிதியியல் அறிக்கையிடல் சூழல் அமைப்பின் நேர்மையினை நிலைநாட்டுவதற்கான அதன் பணியில் உறுதியானதாக விளங்கியது. ஆண்டுமுழுவதும் எமது முயற்சிகள் மூன்று உபாய ரீதியான தூண்களான தொழில்நுட்ப ரீதியான ஆற்றலை வலுப்படுத்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையினை நெறிப்படுத்தல் மற்றும் அதிகரிக்கின்ற நவீன உலகளாவிய நிதியியல் தோற்ற அமைப்பொன்றில் கேள்விகளை நிறைவுசெய்வதற்கான நிறுவனசார் இயலளவினை விரிபடுத்தல் என்பன மீது மையப்படுத்தியிருந்தன.

இருபத்தைந்து ஆண்டுகளாக இச்சபை அசைக்கமுடியாத தொழில்சார்பண்பு மற்றும் சுயாதீனம் என்பவற்றைக் கொண்டு அதன் பொறுப்பாணையினை நிறைவேற்றியுள்ளது. இலங்கை நிதிச் சந்தைகளின் நம்பகத்தன்மைக்கான எமது அயராத பங்களிப்பினையும் முதலீட்டாளர் நம்பிக்கையினை பேணிவளர்ப்பதில் எமது வகிபாகத்தை இவ்வெள்ளிவிழா அடிக்கோடிட்டு காட்டுகின்றது. 2025 இல் இப்பொறுப்பு எமது குறிப்பான மனவுறுதியைக் கொண்டு நிறைவேற்றப்பட்டது முக்கிய தொழில்நுட்ப ஆளணியின் புரள்விலிருந்து தோன்றுகின்ற தொழிற்பாடு சார்ந்த அழுத்தத்திற்கு மத்தியில் சபை ஏற்கனவே காணப்படுகின்ற அதன் நிபுணத்துவத்திலிருந்து வெற்றிகரமாக நன்மைகளை பெற்றதுடன் கண்காணித்தல் நியமங்கள் விட்டுக்கொடுக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்வதற்கு தகைமையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

செயலாற்றல் பொதுநோக்கு மற்றும் சேவை வழங்கல்

மீளாய்வாண்டு காலப்பகுதியில் SLAASMB ஒழுங்கு முறைப்படுத்தலின் செயற்திறன் வாய்ந்த தன்மையினை வலிமைப்படுத்துவதிலும் சேவை வழங்கலை உகப்பாக்கம் செய்வதன் மீதும் கவனம் செலுத்தப்பட்ட தொடர்பான உபாய ரீதியான முன்முயற்சிகளை சபை தொடங்கியது. தொழில்நுட்ப ரீதியான வல்லமையினை மேம்படுத்துவதற்கு சபையின் 42 வெளிவாரி கருத்தரங்குள் மற்றும் செயலமர்வுகளில் உத்தியோகத்தர்கள் பங்கேற்றுபுடன் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதேபோன்று நிலைபெறத்தக்க அறிக்கையிடல் மீது கவனம் செலுத்திய 8 உள்ளக எடுத்துரைப்புகள் மூலம் முழுநிறைவாக்கம் செய்யப்பட்ட இயலளவு கட்டியெழுப்புதலை கடுமையாக முன்னுரிமைப்படுத்தியது. பரிணமான வளர்ச்சியடைகின்ற முறையியல்களுக்கு உள்ளக தொழில்நுட்பவியல் நிபுணத்துவத்தை விரிவுபடுத்தி தயார் நிலையினை உறுதிசெய்வதற்கு வடிவமைக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களுடன் அறிவினைப் பகிர்வும் அமர்வுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் இது மேலும் மெருகூட்டப்பட்டது. உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதில் தடைகளுக்கும் வெளிநாட்டு பயிற்சிக்காக மட்டுப்படுத்தப்பட்ட நிதியளிப்புக்கும் மத்தியிலும் SLAASMB உயர் தொழிற்பாட்டுசார் உத்வேகத்தை பேணி 472 நிதிக் கூற்றுகள் மீளாய்வுகள் மற்றும் 23 கணக்காய்வு பரீட்சிப்புகளை நிறைவுசெய்தது. இணங்குவித்தலை மேம்படுத்துதல், தகவல் இடர்நேர்வினை குறைத்தல் மற்றும் நிதிசார் வெளிப்படுத்துகையின் ஒட்டுமொத்த நம்பகத்தன்மையினை அதிகரித்தல் என்பவற்றில் இச்செயற்பாடுகள் ஏதுவாக அமைந்தன. இறுதியாக, இப்பெறுபேறுகள் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளுதலை வசதிப்படுத்தி, தேசிய நிதி அறிக்கையிடல் கட்டமைப்பில் ஆர்வலர் நம்பிக்கையினை மீள வலிமைப்படுத்துவதன் மூலம் பொருளாதார பெறுமதி உருவாக்கத்தினை இயக்குகின்றன.

சவால்களும் இடர்நேர்வு முகாமைத்துவமும்

தொழிற்பாட்டு ரீதியாக நிறுவனமானது போட்டிமிக்க தொழிலாளர் சந்தையில் தொழில்நுட்ப ரீதியாக தேர்ச்சி பெற்ற ஆளணியினை கவருவதிலும் தக்கவைப்பதிலும் விடாப்பிடியான சவால்களை எதிர்கொண்டது. அரசாங்க நிதியிடல் மீது தங்கியிருத்தல் உள்ளடங்கலாக மூலவளத்தடைகள் பரீட்சித்தல் செயற்பரப்பு மற்றும் இயலளவு விருத்தி முன்முயற்சிகள் விரிவுபடுத்தக்கூடிய வேகத்தினை பாதித்தது. துரித தொழில்நுட்பவியல் மாற்றங்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் அணுகுமுறைகளை பின்பற்றுதல் பரிணாம வளர்ச்சியடைகின்ற சந்தை நிலமைகளுடன் குறிப்பான வியாபார தொழில்முயற்சிகளை அடையாளப்படுத்துவதை அணிசேர்த்தல் மற்றும் கேள்வி மிக்க தொழிற்பாட்டு சூழலொன்றில் பங்குதாரர் நம்பிக்கையினை பேணுதல் என்பனவற்றை உபாய ரீதியான சவால்கள் உள்ளடக்கியிருந்தன.

இச்சவால்களுக்கு மத்தியில் SLAASMB ஆண்டுமுழுவதும் வலுவான ஆளுகை கட்டமைப்பினை பேணியது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் தொழிற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மை என்பவற்றை உறுதி செய்வதற்கு செயல்திறன் மிக்க இடர்நேர்வு, முகாமைத்துவ நடத்தைகள், உள்ளக கட்டுப்பாடுகள், உள்ளக கணக்காய்வு தொழிற்பாடுகள் மற்றும் ஒழுக்கவியல் கட்டமைப்புகள் என்பன வலுப்படுத்தப்பட்டன. ஏற்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்கள் என்பவற்றுடன் இணங்குவித்தல் மைய முன்னுரிமையாக விளங்கியது.


தந்திரோபாய வழிகாட்டலும் எதிர்கால எதிர்பார்க்கையும்

முன்னோக்கி நோக்குகையில், சபையானது அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் பொறுப்பாணையின் நிலைபெறுதன்மையும் செயல்திறன் வாய்ந்த தன்மையும் உறுதிப்படுத்துவதற்கான அதன் கடமைப்பொறுப்பில் உறுதியாக விளங்குகின்றது. எமது முன்னோக்கிய உபாயமானது மிகவும் சுறுசுறுப்பான, தரவுகளினால் இயக்கப்படும் மேற்பார்வை மாதிரியினை நோக்கி மாறுதலடைவதன் மீது மையப்படுத்தியுள்ளது. நிதிக் கூற்று மீளாய்வு மற்றும் கணக்காய்வு பரீட்சிப்புகளை நவீனமயப்படுத்துவதற்கு எமது முகாமைத்துவ தகவல் முறைமைகளின் அனைத்தையும் உள்ளடக்கிய மேம்படுத்தலுடன் ஒன்றுசேர்த்து தெரிவுசெய்யப்பட்ட புத்தாக்கமிக்க தொழில்நுட்பங்களை பின்பற்றுவதனை முக்கிய முன்னுரிமைகள் உள்ளடக்குகின்றன. சர்வதேச ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நியமங்கள் நிர்ணய நிறுவனங்களுடனான எமது கூட்டுமுயற்சியினை விரிவுபடுத்துவதன் மூலம் எமது மேற்பார்வை கட்டமைப்புகள் உலகளாவிய சிறந்த நடத்தைகளுடன் அணிசேர்ந்து காணப்படுகின்றன என்பதை உறுதிசெய்வதை நாம் நோக்காக கொள்கின்றோம். ஒழுங்குமுறைப்படுத்தல் வினைத்திறனை மேம்படுத்தி வலுவான இடர்நேர்வு அடிப்படையிலமைந்த மேற்பார்வை அணுகுமுறைக்கு ஆதரவளிக்கும் விதத்தில் முன்முயற்சிகள் வடிவமைக்கபட்டு நிதியியல் தோற்ற அமைப்பை நவீனமயப்படுத்தும் சிக்கல் வாய்ந்த தன்மைகளுக்கு சபை பதிலிறுத்துவதை உறுதிசெய்யும்.

அதன் நியதிச்சட்ட பொறுப்பாணையினை நிறைவேற்றுவதற்கப்பால் சபை பொது நலனை பாதுகாப்பதில் அதன் அடிப்படை வகிபாகத்தை அங்கீகரிக்கின்றது. உயர்தர நிதி அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வை ஊக்குவித்தல் வெறுமனே தொழில்நுட்ப தேவைப்படுத்தல் ஒன்றன்றி தேசத்தின் சமூக பொருளாதார பின்னலுக்கு இன்றியமையாது பங்களிப்பதாகும் என்பதை நாம் நம்புகின்றோம். ஆற்றல் வாய்ந்த நிறுவன ஆளுகை, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றின் கோட்பாடுகளின் முன்னணி வகிப்பதன் மூலம் சபையின் இறுதிக் குறிக்கோள் முதலீட்டுக்கும் நீண்டகால சுபீட்சத்துக்கும் வினையூக்கியாக நம்பகமான நிதியியல் தகவல்கள் பணியாற்றுகின்ற சமூக நம்பிக்கையினை கொண்ட சூழலொன்றினை பேணி வளர்ப்பதாகும்.

பாராட்டுதல்

ஆண்டுகாலப்பகுதியில் அவர்களது முன்மாதிரியான தொழில்சார்பண்பிற்கும் கடின உழைப்பிற்கும் சபைக்கும் முகாமைத்துவத்திற்கும் சபையின் அலுவலர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றியினை தெரிவிக்கின்றேன். எமது வெற்றியில் முக்கியமாக விளங்குகின்ற அவர்களது தொடர்கின்ற ஒத்துழைப்புக்காக எமது பங்குதாரர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும். ஒன்றாக இணைந்து, இக்கூட்டுமுயற்சிகள் நிதியியல் அறிக்கையிடல் கட்டமைப்பின் நேர்மையினை நிலைநாட்டுவதற்கு சபை தாக்குப்பிடிக்கத்தக்க மற்றும் செயல்திறன் வாய்ந்த அர்ப்பணிப்பு மிக்க நிறுவனமாக விளங்கின்றது என்பதை உறுதி செய்துள்ளன.



திரு. சாந்த ஹல்லொலுவ
பணிப்பாளர் நாயகம் - இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை
27.02.2026

நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு

i. சபையின் உறுப்பினர்களின் அறிக்கை

2025 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற நிதியாண்டுக்காக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள் கண்காணிப்புச் சபையின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளுடன் சேர்த்து அவர்களது அறிக்கையினை சமர்ப்பிப்பதில் சபை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

முதன்மை செயற்பாடுகள்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதாகும். சபையின் தொழிற்பாடு 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில்முயற்சிகளின் நிதிக் கூற்றுகளை தயாரித்தல், எடுத்துரைத்தல் மற்றும் கணக்காய்வு செய்தலில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நியமங்களுடனான இணங்குவித்தலை கண்காணிப்பதாகும். மீளாய்வாண்டின் போது முதன்மை செயற்பாடுகளின் தன்மையில் முக்கிய மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.

தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் செயலாற்றல் பற்றிய மீளாய்வு

மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டுக்கான சபையின் நிதிசார் செயலாற்றல் கீழே தொகுக்கப்பட்டுள்ளது.

- மொத்தமாக ரூபா 100 மில்லியன் கொண்ட தொழிற்பாட்டு செலவினம் அரசாங்க திறைசேரி மானியங்கள் மூலம் முழுமையாக நிதி அளிக்கப்பட்டு, ஆண்டுக்காக மிகை அல்லது பற்றாக்குறை எதனையும் விளைவிக்கவில்லை.
- விரிவான செயலாற்றம் நிதிக் கூற்றுகளில் எடுத்துரைக்கப்பட்டள்ளது.
- இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நிலமைகளை கருத்திற் கொண்டு ஆண்டுகாலப்பகுதியில் சபையின் ஒட்டுமொத்த செயலாற்றம் பற்றி சபை உறுப்பினர்கள் திருப்தியடைகின்றனர்.

கணக்கீட்டு கொள்கைகளும் இணங்குவித்தலும்

சபையின் நிதிக் கூற்றுகள் இலங்கை பாதுகாப்புத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளனனள.

நிதியியல் அறிக்கையிடலுக்கான சபை உறுப்பினர்களின் பொறுப்புடமை

முறையான கணக்கீட்டு பதிவுகளை சபை பேணுகின்றது என்பதனையும் நிதிக் கூற்றுகள் சபையின் விவகாரங்களின் நிலை பற்றி நியாயமான நோக்கொன்றினை எடுத்துரைக்கின்றன என்பதனையும் உறதிசெய்வது சபை உறுப்பினர்களின் பொறுப்பாகும்.

சபையின் உறுப்பினர்கள் பின்வருவனவற்றை உறுதி செய்கின்றனர்.

- பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டு ஒத்திசைவாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.
- நியாயமான மற்றும் முன்மதிமிக்க தீர்வுகளும் மதிப்பீடுகளும் ஆக்கப்பட்டுள்ளன.
- நிதிக் கூற்றுகள் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவில் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

சபையின் உறுப்பினர்கள்

ஆண்டுகாலப்பகுதியில் பதவி வகித்த சபை உறுப்பினர்களின் பெயர்கள் பின்வருமாறு

- திருமதி. கே எம் ஏ என் தவுலகல (தலைவி)
- திருமதி. கே ஏ பி டி சில்வா (2025 செப்டம்பர் 24 தொடக்கம்)
- திருமதி. ஆர்.பி.எச் பெர்னாண்டோ (2025 மார்ச் 1 தொடக்கம்)
- திரு. சி மெண்டிஸ் (2025 அக்டோபர் 9 வரை)
- திரு. கே ஏ எச் குருப்பு
- திரு. டி எச் சுபசிங்க
- திரு. எஸ் எம் எஸ் எஸ் பண்டார
- திரு. பி எம் அமரசிறி
- திரு. என் குணவர்தன
- செல்வி. ஆர் எம் ஆர் டி ராஜபக்ஷ
- திருமதி. ஏ யு டெலகே

மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டின் போது சபை உறப்பினர்களில் பின்வரும் மாற்றங்கள் இடம்பெற்றன.

உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் திருமதி. டப்லிவ் ஏ எஸ். சந்திரசேகர 2025 பெப்ரவரி 28 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பதவியிலிருந்து ஓய்வுபெற்று அவரது பின்னுறுபவராக திருமதி. ஆர்.பி.எச். பெர்னாந்து 2025 மார்ச் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்.

பதில் கம்பனிகள் பதிவாளர் நாயகம் திருமதி. கே.பி.எ.டி.சில்வா 2025 செப்டெம்பர் 24 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

சபை உறுப்பினர்கள் அவர்களது அறிவுக்கெட்டியவரையில் சபையானது அறிக்கையிடும் திகதி அன்றுள்ளவாறு வரிகள். அறவீடுகள் மற்றும் ஏனைய ஒழுங்கமுறைப்படுத்தல் கடப்பாடுகள் தொடர்பிலான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளுடனும் இணங்குயொழுகியுள்ளதென்றும் நிதிக் கூற்றுகளில் போதுமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்றும் உறுதிப்படுத்துகின்றனர்.

சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்

சபை உறுப்பினர்களின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சபையானது நாட்டின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற ஏதேனும் நடவடிக்கையில் சபை ஈடுபட்டிருக்கவில்லை.

அறிக்கையிடும் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுகளுக்கு அல்லது கூற்றுகளில் வெளிப்படுத்தலை அல்லது சீராக்கத்தை வேண்டுகின்ற அறிக்கையிடும் திகதியை தொடர்ந்துவருகின்ற முக்கிய நிகழ்வுகள் எதுவும் காணப்படவில்லை.

நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு

தொடர்ந்து இயங்குதல்

உரிய விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சபை உறுப்பினர்கள், எதிர்நோக்குகின்ற எதிர்காலத்திற்கு தொழிற்பாடு சார்ந்து தொடர்ந்து நிலைத்திருப்பதற்கு சபை போதிய மூலவளங்களை கொண்டுள்ளதென நியாயமான எதிர்பார்க்கையினை கொண்டுள்ளனர். அதற்கமைய நிதிக் கூற்றுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

பாராட்டுக்கள்

ஆண்டு காலப்பகுதியில் அவர்களது தொடர்ச்சியான ஆதரவிற்காக ஊழியர்கள், இலங்கை அரசாங்கம், தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் ஏனைய அனைத்து பங்குதாரர்கள் மூலமும் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புக்காக சபை உறுப்பினர்கள் அவர்களின் பாராட்டுக்களை பதிவு செய்கின்றனர்.

சபை உறுப்பினர்களுக்காகவும் அவர்கள் சார்பிலும்.



திருமதி. கே.எம்.ஏ.என் தவுலகல
தலைவர்
27.02.2026

ii. முக்கிய தொழில் மற்றும் பொறுப்பாணை

1995 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அது தொடங்கப்பட்டதிலிருந்து இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAASMB) இலங்கையின் நிதி அறிக்கையிடல் கட்டமைப்பின் நியதிச்சட்ட அடித்தளமாக தொழிற்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAASMB) அதன் தொடக்கம் முதலே, இலங்கையின் நிதி அறிக்கை கட்டமைப்பின் சட்டபூர்வமான அடித்தளமாகச் செயல்பட்டு வருகிறது. கால் நூற்றாண்டு காலமாக, குறிப்பிட்ட வணிக நிறுவனங்களின் (SBEs) கணக்காய்வு மற்றும் அறிக்கையிடலில் மிக உயர்ந்த நியமங்களைக் கண்காணித்து உறுதி செய்வதே எங்களின் தெளிவான நோக்கமாக இருந்து வருகிறது.

இன்று சபை (SLAASMB) நவீன உலகளவில் இணையப்பெற்ற நிறுவனமாக திகழ்கின்றது. எமது பரிணாம வளர்ச்சியானது சர்வதேச சிறந்த நடத்தைகளுக்கும் செயலூக்கமிக்க அமுல்படுத்தலுக்குமான கடமைப் பொறுப்பினை பிரதிபலிக்கின்றது. கவனமான கண்காணித்தல் ஊடாகவும் வெளிப்படைத்தன்மை மீதான மையப்படுத்தலூடகவும் நாம் வெறுமனே ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு மேலதிகமாக நம்பிக்கையினை வளர்த்து அனைத்து பங்குதாரர்களினதும் நலன்களை பாதுகாப்பதுடன் உலகளாவிய படிமுறையில் வியாபார நிதியிடல் கட்டமைப்பின் நேர்மையினை உறுதிசெய்கின்றோம்.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் பொறுப்பாணையானது குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில்முயற்சிகளின் நிதிக் கூற்றுகளை தயாரித்தல், எடுத்துரைத்தல் மற்றும் கணக்காய்வு செய்வதில் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்குவித்தலை கண்காணிப்பதாகும். இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை கடுமையான செயல்முறைகள் ஊடாக அதாவது, சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளை மீளாய்தல், குறித்துரைக்கபட்ட வியாபார தொழில்முயற்சிகளின் கணக்காய்வுகளை பரிசிலித்தல் இணங்காமை பற்றிய நிகழ்வுகளை விசாரணை செய்தல் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நியமங்களை கடைப்பிடிப்பதற்கு தவறுகின்ற நிறுவனங்களுக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்கெதிராக சீராக்க நடவடிக்கை எடுத்தல் என்பனவூடாக அதன் பொறுப்பாணையை நிறைவேற்றுகின்றது.

இலங்கையின் முன்னணி வியாபாரங்களுக்கிடையிலான மேற்பார்வை

கூட்டிணைப்பு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒழுங்குமுறைப் படுத்தல்களை அனுசரித்து அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகள், ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதி நிறுவனங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க அரசாங்க அல்லது தனியார் கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்கலாக குறித்துரைக்கபட்ட வியாபார தொழில்முயற்சிகளாக பெயர்குறிக்கப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் நியதிச்சட்ட நிதியியல் கடப்பாடுகளை நிறைவு செய்வதற்க வேண்டப்பட்டுள்ளன. அதிகூடிய நிறுவன வெளிப்படைத்தன்மை மட்டத்தினை உறுதி செய்வதற்கும் "உண்மையான மற்றும் நியாயமான நோக்கு" ஒன்றை பிரதிபலிப்பதற்கு நிதி அறிக்கையிடலுக்கும் அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில்முயற்சிகளும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு கண்டிப்பாக அமைவாக அவற்றின் வருடாந்த நிதியியல் கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். அதன் உத்தியோகபூர்வ மீளாய்வுக்காக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபைக்கு அனைத்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளையும் சமர்ப்பிப்பதற்கான இறுதி தேவைப்படுத்தலொன்றுடன் இந்நிறுவனங்கள் இலங்கை கணக்காய்வுத் நியமங்களுடன் சுயாதீன கணக்காய்வு இணங்குவித்தலுக்கு உட்படுகின்றன என்பதும் மேலும் வேண்டப்பட்டுள்ளது.

தத்துவங்களும் அமுலாக்கமும்

குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில்முயற்சிகள் மற்றும் அவற்றின் பணிப்பாளர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்காய்வாளர்கள் மீது சட்டத்தின் 27 ஆம் பிரிவின் தவறுகளாக விபரிக்கப்பட்டவாறான பல்வேறு அபராதங்களை விளைவிக்கக் கூடிய 5 ஆண்டுகளை விஞ்ஞாத காலமொன்றுக்கு ஒன்றில் கடுழிய சிறைத்தண்டனை வரை செல்லக்கூடிய தவணை தவறுதல் மீது சில கடமைகளையும் கடப்பாடுகளையும் சட்டம் விதிக்கின்றது.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAAMB) பணிகளை கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக பணிப்பாளர்கள், முகாமையாளர்கள் கணக்காய்வாளர்கள் போன்றோரிடமிருந்து ஆவணங்களை. தகவல்களை மற்றும் விளக்கங்களை கோருவதற்கு கண்காணிப்புச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டிருக்காதவிடத்து இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAAMB) சீராக்கங்களை மேற்கொள்ளுமாறு நிறுவனத்தை கோரலாம். அதேபோன்று, கணக்காய்வாளர்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்து இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAAMB) நிதிக் கூற்றுகளை மீள் கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வுகளை பயன்படுத்துமாறு குறித்துரைக்கபட்ட வியாபார தொழில்முயற்சியை வேண்டலாம் அல்லது சட்டத்தின் தத்துவங்களின் கீழ் கணக்காய்வாளர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கலாம். உலகளாவிய சிறந்த நடத்தைகளுக்கு இசைவாக நாட்டில் கணக்காய்வு தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் கிரமமான கணக்காய்வு பரீட்சிப்புகளுக்கு மேலதிகமாக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAAMB) இலங்கையில் கருப்பொருள் சார்ந்த கணக்காய்வு பரீட்சிப்புக்களை தொடங்கியுள்ளது.

நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு

ii. முக்கிய தொழில் மற்றும் பொறுப்பாணை (தொடர்ச்சி)

உலகளாவிய தடம்பதித்தல்

நிதி அறிக்கையிடல், கணக்காய்வு மற்றும் இணங்குவித்தலை கண்காணித்தல் என்பவற்றில் உலகளாவிய அபிவிருத்தியுடன் இணைந்து செல்வதற்கு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAAMB) பல சர்வதேச அமைப்புக்களில் உறுப்புரிமையினை வைத்திருக்கின்றது. வேறு உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்துநர்களிடமிருந்து தகவல்களையும் உதவிகளையும் பெற்றுக்கொள்வதற்கு பல ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு நன்மைபயக்கின்ற இணைந்த செயற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கும் இக்கூட்டிணைப்புகள் இயலச் செய்கின்றது. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAAMB) 2007 இல் அதன் முதலாவது முழுநிறைவு கூட்டம் தொடக்கம் சுயாதீன கணக்காய்வு ஒழுங்குமுறைப்படுத்துனர்களின் சர்வதேச மன்றத்தின் (IFIAR) உறுப்பினரொருவராக இருந்து வருகின்றது. இது 2007 தொடக்கம் சர்வதேச கணக்காய்வு மற்றும் உத்தரவாத நியமங்கள் சபையின் மதியுரை ஆலோசனை குழுக்களின் அத்துடன் 2009 தொடக்கம் கணக்காளர்களுக்கான சர்வதேச ஒழுக்கவியல் நியமங்கள் சபையின் (IESBA) மதியுரை ஆலோசனைக் குழுவின் உறுப்பினரொருவராகவும் விளங்குகின்றது. மேலும், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAAMB) 2018 இல் கொழும்பில் சுயாதீன கணக்காய்வு ஒழுங்குமுறைப்படுத்துனர்களின் சர்வதேச மன்ற பரீட்சிப்பு செயலமர்வையும் அனுசரணை வழங்கிய நடாத்தியிருந்தது. இதில் 40 நியாயாதிக்கங்களைச் சேர்ந்த 110 பங்கேற்பாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

உன்னதத்தினை நிலைநாட்டுதல்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAASMB) ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் என்போருக்கு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பவர்கள் மற்றும் கணக்காய்வாளர்களிடமிருந்து பல்வகை பங்குதாரர் பன்மைத்துவ சூழல் அமைப்பு முறையொன்றாக காணப்படுகின்றது. தகவல் அறிந்த பங்குதாரர் தளம் தாக்குப்பிடிக்கத்தக்க பொருளாதாரத்தின் மூலைக்கல் என நாம் நம்புகின்றோம். எமது பங்காளர்களின் அறிவினை செயலூக்கத்துடன் உயர்த்துவதன் மூலம் நிதி அறிக்கையிடலில் ஒப்பற்ற நம்பகத்தன்மையை நோக்கிய பாதையினை நாம் பேணி வளர்க்கின்றோம். ஆற்றல் வாய்ந்த ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புகள் மற்றும் அசைக்க முடியாத மேற்பார்வை என்பனவூடாக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAAMB) பொதுமக்கள் நம்பிக்கையினை வலுப்படுத்தி, எமது தேசத்தின் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை இயக்குவதன் மூலம் நிதிசார் நேர்மையின் உறுதியான பாதுகாவலராக திகழ்கின்றது.

iii. நிறுவனத்தின் தொலை நோக்கு, பணிக் கூற்று, இலக்குகள் மற்றும் விழுமியங்கள்

தொலை நோக்கு

"இலங்கையில் உள்ள பொதுநல நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களில் உயர் மட்ட நம்பகத்தன்மையையும் பங்குதாரர் நம்பிக்கையையும் அடைதல்."

பணிக் கூற்று

"இலங்கையில் உள்ள பொதுநல நிறுவனங்களின் பொது நோக்க நிதிக் கூற்றுக்களில், உண்மையும் நேர்மையும் நிறைந்த பார்வையை முன்வைப்பதை ஊக்குவிக்கும் ஒரு சூழலை வழங்க வேண்டும்."

நிறுவனத்தின் இலக்கு

நிதிக் கூற்று மீளாய்வுகள் மற்றும் கணக்காய்வுகளின் கண்டுபிடிப்புகள் மூலம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விழிப்புணர்வூட்டி, நிதி அறிக்கையின் தரத்தை மேம்படுத்துதல்.மளாய்வுகள் மற்றும் கணக்காய்வுகளின் கண்டுபிடிப்புகள் மூலம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விழிப்புணர்வூட்டி, நிதிக் கூற்றுக்களின் தரத்தை மேம்படுத்துதல்.

நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு

iii. நிறுவனத்தின் தொலை நோக்கு, பணிக் கூற்று, இலக்குகள் மற்றும் விழுமியங்கள் (தொடர்ச்சி)

நிறுவனத்தின் விழுமியங்கள்

இந்த அமைப்பு, தனது கடமையையும் மூலோபாய நோக்கங்களையும் அடைவதில் பின்வரும் முக்கிய விழுமியங்களால் வழிநடத்தப்படுகிறது:

1. ஒருமைப்பாடு: நமது அனைத்து நடவடிக்கைகளிலும் நேர்மை, நியாயம் மற்றும் அறநெறிப் பொறுப்புடன் செயற்பட்டு, நமது முடிவுகளும் செயல்களும் நிதி அறிக்கையிடல் மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் உறுதியையும் நிலைநிறுத்துவதை உறுதி செய்தல்.
2. சுதந்திரம் மற்றும் நடுநிலைமை: நிதிநிலை அறிக்கை ஆய்வுகள் மற்றும் கணக்காய்வுப் பரிசோதனைகளில், தேவையற்ற செல்வாக்கிலிருந்து சுதந்திரமாக இருந்து, நடுநிலையான மற்றும் பாரபட்சமற்ற முடிவுகளை உறுதிசெய்யும் வகையில் நடுநிலையான முடிவுகளை எடுக்க வேண்டும்.
3. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்: நாங்கள் நிதி அறிக்கையிடல் மற்றும் ஒழுங்குமுறை செயன்முறைகளில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதோடு, எங்கள் பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்காகப் பங்குதாரர்களிடம் பொறுப்புக்கூறுகிறோம்.
4. தொழில்முறைச் சிறப்பு: நிதி அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வுத் தொழில்முறை அறிவு, திறன்கள் மற்றும் நடைமுறைகளைத் தொடர்ந்து மேம்படுத்துவதன் மூலம், தொழில்நுட்பத் திறன் மற்றும் தரத்தின் மிக உயர்ந்த தரநிலைகளை அடைய நாங்கள் பாடுபடுகிறோம்.
5. பொது நல நோக்கு: பொது நல அமைப்புகளின் நிதிநிலை அறிக்கைகள் மீதான நம்பிக்கையை வலுப்படுத்துவதன் மூலமும், நிதித் தகவல்களைப் பயன்படுத்துவோரின் நலன்களைப் பாதுகாப்பதன் மூலமும் நாங்கள் பொது நலனுக்காகச் செயல்படுகிறோம்.
6. நிலைத்தன்மை மற்றும் நேர்மை: நாங்கள் தரநிலைகள், கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகவும் நேர்மையாகவும் செயற்படுத்துகிறோம், இதன் மூலம் அனைத்துக் குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வு நிறுவனங்களுக்கும் சமமான அணுகுமுறை உறுதி செய்யப்படுகிறது.
7. தொடர்ச்சியான முன்னேற்றம்: ஆய்வுக் கண்டுபிடிப்புகள், பங்குதாரர்களின் கருத்துகள் மற்றும் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தரநிலைகளில் உருவாகிவரும் முன்னேற்றங்கள் ஆகியவற்றிலிருந்து கற்றுக்கொள்வதன் மூலம், தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடைவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.
8. ஒத்துழைப்பு மற்றும் விழிப்புணர்வு: பொருந்தக்கூடிய தரநிலைகள் குறித்த விழிப்புணர்வு, புரிதல் மற்றும் இணக்கத்தை ஊக்குவிப்பதற்காக, தயாரிப்பாளர்கள், தணிக்கையாளர்கள் மற்றும் சக ஒழுங்குபடுத்துபவர்கள் உள்ளிட்ட பங்குதாரர்களுடன் நாங்கள் ஆக்கப்பூர்வமாக ஈடுபடுகிறோம்.

iv. முக்கிய தந்திரோபாய நோக்கங்கள்

1. நிதி அறிக்கையிடல் இணக்கப்பாடு

அடுத்த மூன்று ஆண்டுகளில், அங்கீகாரம் மற்றும் அளவீட்டுச் சிக்கல்கள் தொடர்பான தரநிலைகளுடனான தொடர்ச்சியான இணக்கமின்மைகளில் 25% குறைப்பை எளிதாக்குவதன் மூலம், குறிப்பிட்ட வணிக நிறுவனங்களால் (Specified Business Enterprises-SBEs) நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் உயர் அளவிலான இணக்கத்தை உறுதி செய்தல்.


2. கணக்காய்வுத் நியமம் தரம் மற்றும் இணக்கம்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையினால் அடையாளம் காணப்பட்ட நியமங்களுடனான தொடர்ச்சியான இணக்கமின்மைகளை அடுத்த மூன்று ஆண்டுகளில் 25% குறைப்பதற்கு வழிவகுப்பதன் மூலம், கணக்காய்வாளர்களால் குறிப்பிட்ட வணிக நிறுவனங்களின் நிதிகளின் கணக்காய்வுகளை நடத்துவதில் இலங்கை கணக்காய்வு நியமங்களுடன் உயர் அளவிலான இணக்கத்தை உறுதி செய்தல்.

நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு

V. நிறுவனக் கட்டமைப்பு, சபையின் பணிப்பாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பணிப்பாளர்களின் பங்கு மற்றும் பொறுப்புகள்

நிறுவனக் கட்டமைப்பு



பணிப்பாளர்கள்	அங்கீகரிக்கப்பட்ட
பணிப்பாளர் நாயகம்	1
தொழில்நுட்ப	
பிரதிப் பணிப்பாளர் நாயகம்	2
பணிப்பாளர் மேற்பார்வை	6
பிரதிப் பணிப்பாளர் மேற்பார்வை	6
உதவிப் பணிப்பாளர் மேற்பார்வை - தரம் I	3
உதவிப் பணிப்பாளர் மேற்பார்வை - தரம் Ii	3
நிதி மற்றும் நிர்வாகம்	
உதவிப் பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்	1
உதவிப் பணிப்பாளர் சட்டம்	1
எஸ்பிஈ நிர்வாக அலுவலர்	1
தகவல் தொழில்நுட்ப அலுவலர்	1
நிதி மற்றும் நிர்வாக நிறைவேற்று அலுவலர்	1
முகாமைத்துவ உதவியாளர்கள்	3
பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட உதவியாளர்	1
சாரதிகள்	2
அலுவலக உதவியாளர்	2
மொத்தம்	**34**


நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு

V. நிறுவனக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

சபையின் பணிப்பாளர்கள்



1. திருமதி. அக்ரா எம். தொடம்கொட
2. செல்வி எச்.ஏ. கலனி எஸ். ஹெட்டியாராச்சி
3. திரு. எச். கே. எஸ். ஹல்லொலுவ
4. செல்வி. ஆஷா முபாரக்
5. திரு. மகேஷ் டி சில்வா
6. திருமதி. ரந்திமா டி சில்வா
7. செல்வி. துமிந்த கே. குருவத்த
8. செல்வி. பிரசாதி டி. வீரசிங்க
9. செல்வி. எம். அபேசேகர
10. திரு. கே. ரசிக எஸ். பண்டார
11. திரு. தாரக ஆர். ஜயசேகர
12. திரு. பதும் பண்டார
13. திரு. கே.வி.ஜி.பி மனோஜ் லக்மால்
14. திரு. கே.எச்.பி. பினர எல்.அமரசிங்க
15. திரு. டி.ஜி. சங்க எஸ் குமாரசிறி
16. திருமதி. யு.டி.என். மல்ஷானி
17. செல்வி. எம். எம். அபேசேகர



நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு

V. நிறுவனக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் மேற்பார்வைப் பணிப்பாளர்கள்

திரு. எச்.கே. ஷாந்த ஹல்லொலுவ
FCA, B. Sc(Acc) Sp. (Hons.) (USJP), MBA in Finance (USJP)
பணிப்பாளர் நாயகம்

செல்வி ஆஷா முபாரக்
FCA, MBA (Col)
பிரதிப் பணிப்பாளர் நாயகம்

செல்வி எச்.ஏ. கலனி எஸ். ஹெட்டியாராச்சி
FCA, ACCA, MBA (PIM_USJP), B.Sc (Acc) Sp (Hons.) (USJP)
பணிப்பாளர் மேற்பார்வை

செல்வி ஆக்ரா எம். தொடம்கொட
FCA, MBA(USQ), PGDBF, BBA(Hons.)(Col).
பணிப்பாளர் மேற்பார்வை

திருமதி. ரண்டிமா டி சில்வா
FCA, B. Sc(Acc) Sp. (Hons.) (USJP)
பணிப்பாளர் மேற்பார்வை

திரு. மகேஷ் டி சில்வா
FCA, M.Sc. Fin(USJP). B. Sc (USJP)
பணிப்பாளர் மேற்பார்வை

திரு. கே.எச்.பி. பினர எல். அமரசிங்க
ACA, B.Com (Specialization in Acc. & Finance) (EUSL)
உதவி பணிப்பாளர் மேற்பார்வை

திரு. டி.ஆர். ஜயசேகர
ACA, B. Com (Special) (USJP)
உதவி பணிப்பாளர் மேற்பார்வை

நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு

V. நிறுவனக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

மேற்பார்வைப் பணிப்பாளர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAASMB) மேற்பார்வைப் பணியாளர்கள், சபையின் சட்டப்பூர்வ ஆணையை நிறைவேற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அவர்களுடைய பன்முகப் பணிகளானது, உயர் மட்ட ஒழுங்குமுறை மேற்பார்வை, தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் நிறுவன ஆளுகை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. ஒழுங்குமுறை மேற்பார்வை மற்றும் அமுலாக்கம்

கடுமையான கண்காணிப்பின் மூலம் நிதி அறிக்கை அமைப்பின் நம்பகத்தன்மையைப் பேணுவதே மேற்பார்வைப் பணியாளர்களின் முக்கியப் பணியாகும்

- இணக்க மதிப்பாய்வுகள்: இலங்கை கணக்கீட்டு தராதரங்கள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்காக, குறிப்பிட்ட வணிக நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகள் மீது விரிவான மதிப்பாய்வுகளை நடத்துதல்.
- கணக்காய்வு மேற்பார்வைகள்: இலங்கை கணக்காய்வு நியம நிலைகளுக்கு இணங்குவதை சரிபார்க்க, குறிப்பிட்ட வணிக நிறுவனங்களின் கணக்காய்வுகளின் விரிவான ஆய்வுகளை மேற்கொள்வது.
- விசாரணைகள் மற்றும் அமுலாக்கம்: பரிந்துரைக்கப்பட்ட நியம நிலைகளுக்கு பூர்த்தி செய்யத் தவறும் நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்களுக்கு எதிராக, இணக்கமின்மை நிகழ்வுகளைக் கண்டறிந்து, திருத்த நடவடிக்கைகள் அல்லது அமுலாக்க நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக விசாரணைகளை முன்னின்று நடத்துதல்.

2. தொழில்நுட்ப சிறப்பு மற்றும் தந்திரோபாயம்

பணியாளர்கள் சபையின் தொழில்நுட்ப உந்துசக்தியாகச் செயற்பட்டு, ஒழுங்குமுறை கட்டமைப்புகள் தற்போதையதாகவும் திறம்பட்டதாகவும் இருப்பதை உறுதி செய்கின்றனர்:

- தொழில்நுட்ப ஆலோசனை: வளர்ந்து வரும் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரநிலைகள் குறித்து தொழில்நுட்பக் குழுக்களுக்கு ஆராய்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு மற்றும் தொழில்முறைப் பரிந்துரைகளை வழங்குதல்.
- உத்திசார் திட்டமிடல்: பணிப்பாளர்கள் குழுவின் உத்திசார் திட்டம் மற்றும் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளை (KPIs) உருவாக்குவதிலும் கண்காணிப்பதிலும் பங்களித்தல்.
- கண்காணிப்பு: அறிக்கையிடல் நியமங்களில் உருவாகி வரும் உலகளாவிய முன்னேற்றங்களைக் கண்காணித்து, உள்ளூர் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (SBE) சூழலில் அவற்றின் சாத்தியமான தாக்கத்தை மதிப்பிடுதல்.

3. நிறுவன ஒத்துழைப்பு மற்றும் திறன் மேம்பாடு

நேரடி மேற்பார்வைக்கு அப்பால், பணியாளர்கள் சபையின் உள்ளக மீள்திறனையும் வெளிப்புற செல்வாக்கையும் உறுதி செய்கின்றனர்:

- அறிவு முகாமைத்துவம்: தொழிலின் தொழில்நுட்ப ஆழத்தை மேம்படுத்துவதற்காக, உள்ளக மற்றும் வெளிப்புறப் பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து வழங்குதல்.
- சட்டப்பூர்வ அறிக்கையிடல்: சபை ஆவணங்கள், உத்திசார் முகாமைத்துவ சமர்ப்பிப்புகள் மற்றும் ஆண்டு அறிக்கை ஆகியவற்றின் தயாரிப்பை நிர்வகித்தல்.
- பங்குதாரர் ஈடுபாடு: இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபைக்கும் தொழில்முறை அமைப்புகள், சர்வதேச ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் பிற முக்கியப் பங்குதாரர்களுக்கும் இடையே ஒரு தொழில்நுட்பத் தொடர்பாளராகச் செயல்படுதல்.

4. ஆளுகை மற்றும் நெறிமுறைகள்

சபையின் நம்பகத்தன்மை அதன் ஊழியர்களின் தொழில்முறை நடத்தையைச் சார்ந்துள்ளது:

- நெறிமுறை நியமங்கள்: அனைத்து மேற்பார்வை நடவடிக்கைகளிலும் மிக உயர்ந்த அளவிலான இரகசியத்தன்மை, சுதந்திரம் மற்றும் தொழில்முறை நெறிமுறைகளைப் பேணுதல்.
- ஆவணப்படுத்தல் மற்றும் கண்டிப்பு: தேசிய ஆளுகைத் தேவைகளுக்கு முழுமையாக இணங்க, மிகத் துல்லியமான பதிவுகளையும் ஆவணங்களையும் பராமரித்தல்.

நிறுவனசார் முகக்குறிப்பு பற்றிய பொதுநோக்கு

vi. ஆளுகைக் கட்டமைப்பு

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் 2025

கே எம் ஏ என் தவுலகல *FCMA (UK), MBA (USJP), MSc in Financial and Business Economics University of Essex UK* சிரேஷ்ட பிரதி ஆளுநர் - இலங்கை மத்திய வங்கி	**தவிசாளர்**
கே ஏ பி டி சில்வா *B.Com. (Colombo),MPA (USJP), M.Econ. (UoK)* பதில் கம்பனிகள் பதிவாளர் நாயகம்	**பதவி வழி உறுப்பினர்** (2025 செப்டம்பர் 24 முதல்)
டபிள்யு ஏ எஸ் சந்திரசேகர *B.Sc Business Admin (USJP), MA Econ (UoK)* உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்	**பதவி வழி உறுப்பினர்** (2025 பெப்ரவரி 28 வரை)
ஆர் பி எச் பெர்னாண்டோ *Attorney-at-Law, MBA Tax (USJP), LLB (Col)* உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்	**பதவி வழி உறுப்பினர்** (2025 மார்ச் 1 முதல்)
சீ மென்டிஸ் *Attorney - at – Law* பணிப்பாளர் நாயகம், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (up to 9 October 2025)	**பதவி வழி உறுப்பினர்** (2025 ஒக்டோபர் 9 வரை)
ரீ எச் சுபசிங்ஹ *FCA, CPFA (UK), FCMA, CISA (USA),MBA (Fin) (Col), LLB (Hons), Attorney-at-Law* உப தலைவர், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம், உறுப்பினர், தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம், குழும நிதி பணிப்பாளர் - மூரே ஐயர்	**நியமிக்கப்பட்ட உறுப்பினர்** - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம்.
கே ஏ எச் குருப்பு *FCA, MBA (PIM), MSc Fin. Economics. (Col), B.Sc Accountancy (USJP)* தலைவர், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம், ஆலோசகர், தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம், குழும நிதி பணிப்பாளர் - டேவிட் பீரிஸ் கம்பனி	**நியமிக்கப்பட்ட உறுப்பினர்** - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம்.
எஸ் எம் எஸ் எஸ் பண்டார *FCA, MBA (Col), B.Sc (Acc. and Fin. Management) (USJP)* முன்னாள் தலைவர் - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம், பங்காளர், பி ஆர் டி சில்வா அண்ட் கம்பெனி	**நியமிக்கப்பட்ட உறுப்பினர்** - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம்.
எம் அமரசிறி *MBA, FCMA, CGMA, B.Sc (Eng)* குழும தலைமை நிதி அலுவலர் - ஏசிஎல் கேபிள்ஸ் பிஎல்சி, கேபிள் சொல்யூசன்ஸ், ரெசஸ் எனர்ஜி பிஎல்சி, எத்திமலே பிளான்டேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் பணிப்பாளர் குழு உறுப்பினர்	**நியமிக்கப்பட்ட உறுப்பினர்** - ஐக்கிய இராச்சிய பட்டயக் கணக்காளர் முகாமைத்துவ கணக்குகள் இலங்கை பிரிவு
என் குணவர்தன *Attorney-at-Law, CFA, ACA, ACMA* முன்னோடி பங்காளர் - நித்யா பங்காளர்கள்	**நியமிக்கப்பட்ட உறுப்பினர்** - இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்
ஆர் எம் ஆர் டி ராஜபக்ஷ *FCMA(UK), CGMA, CFA* சுயாதீன நிறைவேற்றுதரமற்ற பணிப்பாளர் - பெர்ஸ்ட் கெபிடல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஆசியா சியாக்கா கமோடிடிஸ் பிஎல்சி மற்றும் களனி ரயர்ஸ் பிஎல்சி	**நியமிக்கப்பட்ட உறுப்பினர்** - இலங்கை வர்த்தக சங்கம்
ஏ டிலாகே *FCA, ACMA, CGMA, B Sc. (Acc. and Fin Mgmt.) Hons (USJP), CPA* பிரதான நிதி அலுவலர் - ஹட்டன் நெஷனல் வங்கி பிஎல்சி, பணிப்பாளர் சபை உறுப்பினர் - சித்மா டெவலப்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	**நியமிக்கப்பட்ட உறுப்பினர்** - இலங்கை வங்கிகள் அமைப்பு
டி வீரதுங்க *CCS* செக்ரெட்டரியஸ் (பிரைவெட்) லிமிடெட்	**பணிப்பாளர் சபை செயலாளர்**

சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

Vi.ஆளுகைக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



திருமதி. கே எம் ஏ என் தவுலகல

FCMA (UK), MBA (USJP),
MSC in Financial and Business Economics University of Essex UK

திருமதி. தவுலகல, சபையின் தலைவராவர். அவர் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனராவர். அவர் நிதி, கணக்காய்வு, நிதிய முகாமைத்துவம், ஒழுங்குபடுத்தல், பேரின முன்னெச்சரிக்கை அவதானிப்பு, மனித வள முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவம் போன்ற துறைகளை மேவுகை செய்யும் வகையில் இலங்கை மத்திய வங்கியில் 34 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தை கொண்டுள்ளார்.



திருமதி. கே ஏ பி டி சில்வா

B.Com. (Col),MPA (USJP), M.Econ. (UoK)

திருமதி அரவிந்தி டி சில்வா, இலங்கை கணக்காளர் சேவையின் சிறப்புத் தர அதிகாரி ஆவார். இவர் தற்போது வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பிரதம நிதி அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். மேலும், இவர் பதில் கம்பனிகள் பதிவாளர் நாயகமாகவும் பணியாற்றி வருகிறார்.

இவர் 1995 ஆம் ஆண்டில் இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்தார். மேலும், வெளிவிவகார அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, பொது சேவை ஆணைக்குழு, கலாச்சார விவகாரங்கள் அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு போன்ற பல முக்கிய அமைச்சுக்களில் பணியாற்றியுள்ளார். இவர் இலங்கை பட்டயப் பொது நிதி கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினராகவும் உள்ளார்.



திருமதி. ஆர் பி எச் பெர்னாண்டோ

Attorney-at-Law, MBA Tax (USJP), LLB (Col)

திருமதி பெர்னாண்டோ, இலங்கையின் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆவார். திருமதி பெர்னாண்டோ, இலங்கையின் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 25 ஆண்டுகளுக்கும் மேலான சிறப்பான சேவையாற்றிய அனுபவமிக்க ஒரு வரி நிபுணர் ஆவார். தனது தொழில் வாழ்க்கை முழுவதும், வரி செலுத்துவோர் பதிவு, மதிப்பீடு, அறவீடு மற்றும் அமுலாக்கம் உள்ளிட்ட வரி நிர்வாகம் மற்றும் இணக்கத்தின் முழு அளவிலும் அவர் விரிவான நிபுணத்துவத்தைப் பெற்றுள்ளார்.

வரிக் கொள்கை உருவாக்கத்தில் அவர் ஒரு முக்கியப் பங்காற்றியுள்ளார். மேலும், சர்வதேச வரிவிதிப்பனவு, வரிச் சட்டங்களின் சட்டப்பூர்வ விளக்கம், சட்ட வரைவு மற்றும் மாற்று விலை நிர்ணயம் ஆகியவற்றில் அவர் ஆழ்ந்த நிபுணத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார். அவரது தொழில்முறை அனுபவமானது, சிக்கலான எல்லை தாண்டிய வரி விவகாரங்கள், இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தங்கள் மற்றும் மாற்று விலை நிர்ணயத்தில் ஏற்படும் தகராறு தீர்வு வரையிலும் விரிந்துள்ளது. இது, வரிவிதிப்பின் தொழில்நுட்ப மற்றும் கொள்கை சார்ந்த அம்சங்கள் இரண்டிலும் அவரை மிகவும் மதிக்கப்படும் ஒரு நிபுணராக ஆக்குகிறது.

நிர்வாகம், கொள்கை வகுத்தல், சட்டம் மற்றும் சர்வதேச வரிவிதிப்பனவு ஆகியவற்றில் திருமதி பெர்னாண்டோ கொண்டுள்ள ஒருங்கிணைந்த அனுபவமானது, நவீன வரி அமைப்புகளின் கோட்பாட்டு மற்றும் நடைமுறைப் பரிமாணங்கள் இரண்டையும் ஆழமாகப் புரிந்துகொண்ட ஒரு சிரேஷ்ட நிபுணராக அவரை நிலைநிறுத்துகிறது

சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

Vi.ஆளுகைக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



திரு. சீ மெண்டிஸ்

Attorney - at – Law

திரு. மெண்டிஸ், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆவார்.



திரு. எஸ் எம் எஸ் எஸ் பண்டார

FCA, MBA (Col), B.Sc Acc. and Fin. Management (USJP)

திரு. பண்டார இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவராவார். அவர், B. R. De Silva & Co. பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பங்காளராக உள்ளார். அத்துடன் அவர் காப்புறுதிச் சேவைகள் மற்றும் நிதி அறிக்கையிடலில் விசேடத்துவத்துடனான 27 ஆண்டு நடைமுறை அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பு (CAPA) மற்றும் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம் (SAFA) ஆகியவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் உள்ளார். மேலும், அவர் களனிப் பல்கலைக்கழகத்தில் ஆளுநர் சபை உறுப்பினராகவும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவராகவும் உள்ளார்.



திரு. கே ஏ எச் குருப்பு

FCA, MBA (PIM), MSc Fin. Economics. (Col), B.Sc Accountancy (USJP)

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவரான திரு. ஹேஷன குருப்பு, ஒரு புகழ்பெற்ற நிதி நிபுணர் ஆவார். அவர் தெற்காசிய கணக்காளர்கள் கூட்டமைப்பின் ஆலோசகராகவும் பணியாற்றுகிறார். இவர் தற்போது டேவிட் பீரிஸ் குழும கம்பனிகளில் குழு நிதி பணிப்பாளராகப் பதவி வகிப்பதுடன், அதன் துணைக் கம்பனிகள் பலவற்றுக்கு பணிப்பாளர் சபை உறுப்பினராகப் பணியாற்றுகிறார்.

திரு. குருப்பு 2024 இல் தெற்காசிய கணக்காளர்கள் கூட்டமைப்பின் தலைவராகவும், 2023 இல் துணைத் தலைவராகவும் மதிப்புமிக்க பதவிகளை வகித்தார். மேலும், அவர் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணையாளராகவும் உள்ளார்.

சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

Vi.ஆளுகைக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



திரு. மகேஷ் அமரசிறி

MBA, FCMA, CGMA, B.Sc (Eng)

தற்போது ஏசிஎல் கேபில்ஸ் பிஎல்சி கம்பனியில் குழு தலைமை நிதி அதிகாரியாகப் பணியாற்றும் திரு. மகேஷ் அமரசிறி, மூலோபாய திட்டமிடல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். ஏசிஎல் கேபில்ஸ் பிஎல்சி கம்பனியில் இணைவதற்கு முன்னர், திரு. அமரசிறி, டிஎஸ்ஜி குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி மற்றும் என்டிபி கெபிடல் ஹோல்டிங்ஸ் பிஎல்சியில் தனியார் பங்கு முகாமைத்துவத்தில் சிரேஷ்ட துணைத் தலைவர் உள்ளிட்ட சிரேஷ்ட தலைமைப் பதவிகளை வகித்தார். எடிசலாட் லங்கா (பிரைவேட்) லிமிடெட், என்டிபி முதலீட்டு வங்கி மற்றும் மாஸ் ஹோல்டிங்ஸ் ஆகியவற்றில் தந்திரோபாய திட்டமிடல் தலைவராகவும் பணியாற்றினார்.

தனது நிறுவனப் பங்களிப்புகளுக்கு மேலதிகமாக, திரு. அமரசிறி, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சட்டப்பூர்வ கணக்கீட்டு நியமங்கள் குழுவிலும் பணியாற்றுகிறார். அவர் முன்னர் இலங்கை நுகர்வோர் விவகார பேரவையின் உறுப்பினராகவும், CIMA இன் பேரவை உறுப்பினராகவும் இருந்தார்.



திரு. ரீ எச் சுபசிங்க

FCA, CPFA (UK), FCMA, CISA (USA),MBA (Fin.) (Col), LLB (Hons.), Attorney-at-Law

திரு. சுபசிங்க, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினராகவும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வழக்கறிஞராகவும் உள்ளார்.

அவர் தற்போது இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றுகிறார். அவர் தெற்காசிய கணக்காளர்கள் கூட்டமைப்பின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், ஆசிய மற்றும் பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

தற்போது அவர் மூர் கன்சல்டிங் (பிரைவேட்) லிமிடெட்டின் நிர்வாக பணிப்பாளராகவும், மூர் ஐயரின் கூட்டு நிர்வாக கூட்டாளராகவும் உள்ளார். மேலும், அவர் சனச பொதுக் காப்புறுதி லிமிடெட்டின் தலைவராகவும், அமானா வங்கி பிஎல்சியின் சிரேஷ்ட சுயாதீன இயக்குநராகவும் பணியாற்றுகிறார். மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும், பல அரச பல்கலைக்கழகங்களில் வருகைதரு விரிவுரையாளராகவும் உள்ளார்.

திரு. சுபசிங்க, சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை எளிமைப்படுத்துவதற்கான சனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், இலங்கை மத்திய வங்கியால் நிறுவப்பட்ட தோல்வியுற்ற அனுமதிப் பத்திரம் பெற்ற நிதி நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கான குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.

சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

vi. ஆளுகைக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



திரு. நவோமல் குணவர்தன
Attorney-at-Law, CFA, ACA, ACMA

திரு. குணவர்தன ஒரு வழக்கறிஞர் என்பதுடன் நித்யா பார்ட்னர்ஸ், வழக்கறிஞர்கள் நிறுவனத்தில் முன்னோடி பங்காளராக உள்ளார். படுகடன் வெளியீடுகள், வங்கித் தொழில் ஒழுங்குவிதிகள், வழித்தோன்றல்கள், பத்திரமயமாக்கல் மற்றும் நிறுவன மறுசீரமைப்பு மற்றும் வரிச் சட்டம் போன்ற நிதிச் சட்டம் தொடர்பான துறைகளில் அவரது நிபுணத்துவம் அடங்கும்.

திரு. குணவர்தன தற்போது கம்பனி சட்ட ஆலோசனை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், இலங்கை வர்த்தக சபையின் வரிவிதிப்புக் குழுவின் உறுப்பினராகவும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் நிறுவன ஆளுகைக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.



திருமதி. எ யூ டெலகே
FCA, ACMA, CGMA, B.Sc Acc and Fin Management (Hons.) (USJP), CPA

திருமதி டெலகே, நிதித் துறையில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் சித்மா டெவலப்மென்ட் (பிரைவட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபை இயக்குநர்கள் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றுகிறார்.



திருமதி. ஆர் எம் ஆர் டி ராஜபக்ஷ
FCMA(UK), CGMA, CFA

நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பி.எல்.சி, பர்ஸ்ட் கெபிடல் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி மற்றும் ஆசியா சியாகா கெமடிரீஸ் பி.எல்.சி ஆகியவற்றில் சுயாதீன நிர்வாகமற்ற இயக்குநரான திருமதி ராஜபக்ஷ நிதி முகாமைத்துவ மற்றும் நிதித் துறைகளில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

திருமதி ராஜபக்ஷ ஒரு சுயாதீன நிதி ஆலோசகர் மற்றும் டென்னிஸன் அன்ட் வினிதா ரொட்ரிகோ அறக்கட்டளையின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

திருமதி ராஜபக்ஷ ஒரு நிறுவனர் உறுப்பினராகவும், பல ஆண்டுகள் CFA சொசைட்டி இலங்கையின் இயக்குநராகவும் பணியாற்றினார். அவர் தனது தொழில் பயணத்தை இலங்கையின் பிரைஸ்வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸில் தொடங்கினார், அதன் பிறகு தனது பணி வாழ்க்கையின் பெரும்பகுதியை சீபேங்க் அசெட் மேனேஜ்மென்ட் லிமிடெட்டில் சிரேஷ்ட நிதி முகாமையாளராகக் கழித்தார். அவர் ஐபிஎம் இலங்கை மற்றும் பங்களாதேஷத்தின் தலைமை நிதி அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

சபை உறுப்பினர்கள்பற்றிய விபரம்

Vi. ஆளுகைக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

அவதானிப்பாளர்கள் / சபையின் அழைக்கப்பட்டவர்கள்



நியதிச்சட்ட கணக்காய்வு தராதரங்கள் குழுவின் தலைவர்
திரு ரீ ஜே எஸ் ராஜகாரியர்
FCA, FCCA, FCMA(UK), CGMA

திரு. ராஜகாரியர் இலங்கையிலுள்ள கேபிளம்ஜி இன் பங்காளராவர். அவர் பொதுக் கணக்கீட்டு நடைமுறைகளில் 38 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் கேபிளம்ஜி நிறுவனத்தின் கணக்காய்வு தலைவராக செயற்படுகின்றார். அவர் கேபிளம்ஜி இன் மத்திய கிழக்கு மற்றும் தென் ஆசிய பிராந்தியத்தில் நிதிச் சேவைகளின் தலைவராக இருந்ததுடன் இலங்கைக்கான கேபிளம்ஜி இன் நிதிச் சேவைத் துறைக்கு பொறுப்பாக உள்ளார். அவரின் வேலை வெளிப்பாடுகள் ஓமான், துபாய், மாலைதீவுகள் மற்றும் லண்டனில் இருந்த வெளிநாட்டு அனுபவத்தை குறிப்பிடலாம். அவர் 2018 - 2020 காலப்பகுதியின் போது இலங்கை ACCA இன் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். திரு. ராஜகாரியர் அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் நியதிச்சட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் ஏனைய சில குழுக்கள் மற்றும் பீடங்களில் சேவையாற்றி கொள்கைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டல்களை வழங்குபவராக செயற்பட்டு வருகின்றார்.



கணக்கீட்டு தராதரங்கள் குழுவின் தலைவர்
திரு ரஜித் பெரேரா
FCA, ACMA

திரு பெரேரா, இலங்கையின் எர்னஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தில் ஒரு பங்குதாரராக உள்ளார். அவர் IFRS தலைவராகவும், இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான நிதி கணக்கியல் ஆலோசனை மற்றும் இடர் முகாமைத்துவத் தலைவராகவும் செயற்படுகிறார்.

கணக்கீட்டு ஆலோசனை மற்றும் இடர் முகாமைத்துவத்தில் 17 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான அனுபவம் கொண்ட திரு பெரேரா, தெற்காசிய கணக்காளர்கள் கூட்டமைப்பின் கணக்கீட்டு நியமங்கள் குழு மற்றும் இலங்கை கணக்காளர் சங்கத்தின் சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழு ஆகியவற்றின் மாற்றுத் தலைவராகப் பணியாற்றுகிறார். மேலும், அவர் பல தொழில்முறை சங்கங்கள் மற்றும் அமைப்புகளில் உறுப்பினராகவும் உள்ளார்.

சபை உறுப்பினர்கள்பற்றிய விபரம்

vi. ஆளுகைக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

அவதானிப்பாளர்கள் / சபையின் அழைக்கப்பட்டவர்கள்



திறைசேரி பிரதிநிதி
செல்வி. எம் டி வி ஐ அமரசேகர
B.Sc (Hons) Economics & Management, MA

திருமதி அமரசேகர, பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக உள்ளார் என்பதுடன் அரசாங்க துறையில் 22 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் பல நிறுவனங்களில் பணிப்பாளர் சபை உறுப்பினராக பணியாற்றியுள்ளார், மேலும் தற்போது இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகம், ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை மற்றும் இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம் உள்ளிட்ட பணிப்பாளர் சபைகளில் உறுப்பினராக உள்ளார்.



பணிப்பாளர் நாயகம்
திரு. எச் கே எஸ் ஹல்லொலுவ
FCA, B Sc Accountancy (Special.)(USJP), MBA in Finance (USJP)

திரு. ஹல்லொலுவ, நிதித் தலைமை, ஒழுங்குமுறை மேற்பார்வை மற்றும் உத்திசார் முகாமைத்துவம் ஆகியவற்றில் 20 ஆண்டுகளுக்கும் மேலான சிறப்பான தொழில் வாழ்க்கையைக் கொண்ட, மிகவும் திறமை வாய்ந்த பெலோ பட்டயக் கணக்காளர் ஆவார். நுகர்வோர் பொருட்கள், உற்பத்தி, வங்கி மற்றும் தொழில்முறை சேவைகள் ஆகிய பல்துறை அனுபவங்களின் தனித்துவமான கலவையே அவரது நிபுணத்துவத்திற்கு வரையறையாகும். ஆஸ்திரேலியா, பிஜி தீவுகள், பப்புவா நியூ கினியா மற்றும் மாலைத்தீவுகள் உள்ளிட்ட பல்வேறு புவியியல் பகுதிகளில் சிரேஷ்ட தலைமை மற்றும் ஆலோசனைப் பதவிகளை வகித்ததன் மூலம், அவரது தொழில் வாழ்க்கை உயர் தொழில்நுட்பத் தேர்ச்சி மற்றும் உண்மையான உலகளாவிய கண்ணோட்டத்தால் வகைப்படுத்தப்படுகிறது.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையில் இணைவதற்கு முன்பு, அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் தொழில்நுட்ப மற்றும் சர்வதேச உறவுகளின் பணிப்பாளராகப் பணியாற்றினார். மேலும், அவர் 2024 இல் தெற்காசிய கணக்காளர்கள் கூட்டமைப்பின் நிர்வாகச் செயலாளர் என்ற மதிப்புமிக்க பதவியையும், அரசாங்கத்தின் 2023-24 கடன் மறுசீரமைப்புத் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் நிதி ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் செயலாளராகவும் பணியாற்றினார்.

சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

Vi. ஆளுகைக் கட்டமைப்பு (தொடர்ச்சி)

சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்கள்

கணக்காய்வுக் குழு

1. திரு. எஸ் எம் எஸ் எஸ் பண்டார - தலைவர்
2. திருமதி. ஏ யு டெலகே - உறுப்பினர்
3. திருமதி. எம் ரி ஐ வி அமரசேகர - உறுப்பினர்
4. திருமதி. எல் டி ஆர் எல் லியனகே - கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி - அவதானிப்பாளர்
5. உறுப்பினரல்லாத செயலாளர் - திருமதி எச் பீ ரஸ்ஸாக் (பிரதி பணிப்பாளர் நாயகம்) 2025 ஒக்டோபர் 31 வரை
6. உறுப்பினரல்லாத செயலாளர் - செல்வி எச்.ஏ.கே.எஸ். ஹெட்டியாராச்சி (பணிப்பாளர் மேற்பார்வை) - 2025 நவம்பர் 1 முதல்

பணி:

- நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான வெளிப்படுத்தல்களின் நம்பகத்தன்மை மற்றும் நேர்மையை மேற்பார்வையிடுதல்.
- உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் இடர் முகாமைத்துவச் செயன்முறைகளின் போதுமான தன்மை மற்றும் செயற்திறனை மீளாய்வு செய்தல்.
- பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் நிதிக் கூற்று நியமங்களுக்கு இணங்குவதைக் கண்காணித்தல்.
இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையானது, சட்டத்தின் விதிமுறைகளின்படி, உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையால் நிர்வகிக்கப்படுகிறது. அதன்படி, சபையானது 3 பதவிவழி உறுப்பினர்களையும், அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளிலிருந்து நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட 10 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. பதவிவழி உறுப்பினர்கள், கம்பனிகள் பதிவாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆவார்கள். நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், இலங்கை மத்திய வங்கி, இலங்கை பட்டயக் கணக்காளர் (3 உறுப்பினர்கள்), ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் இலங்கை பிரிவு, இலங்கை சட்டத்தீர்வை, இலங்கை வர்த்தக சபை, இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சபைகளின் கூட்டமைப்பு, இலங்கை வங்கிகள் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழு ஆகியவற்றிலிருந்து பரிந்துரைக்கப்பட்டவர்கள் ஆவர். ஓர் உறுப்பினரின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் ஆகும்.

இலங்கை மத்திய வங்கியின் சிரே‘ட பிரதி ஆளுநர் திருமதி கே. எம். ஏ. என். தவுலகல அவர்கள், அந்த ஆண்டில் தலைவராகப் பணியாற்றினார்.

சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட சபை உறுப்பினர்களான செல்வி ஏ. யு. தெலகே, செல்வி ஆர். ராஜபக்ச, திரு. பி. எம். அமரசிறி, திரு. என். குனவர்தன, திரு. கே. ஏ. எச். குருப்பு மற்றும் திரு. டி. எச். சுபசிங்க ஆகியோர், அந்த ஆண்டில் சில குறிப்பிட்ட வணிக நிறுவனங்களின் பணிப்பாளர்களாகவோ அல்லது சிரேஷ்ட அதிகாரிகளாகவோ பணியாற்றினர். இதேபோல், சபையின் உறுப்பினர்களாக இருந்த திருவாளர்கள் எஸ்.எம்.எஸ்.எஸ். பண்டார மற்றும் டி. எச். சுபசிங்க ஆகியோர், சில குறிப்பிட்ட வணிக நிறுவனங்களை கணக்காய்வு செய்யும் தொழிலசார் கணக்காளர்களின் நிறுவனங்களில் பங்குதாரர்களாகவும், சில சிறப்பு வங்கிகளின் கணக்காய்வு குழுக்களுக்கு பணிப்பாளர்களாகவோ அல்லது ஆலோசகர்களாகவோ பணியாற்றினர்.

குறிப்பிட்ட காலகட்டத்தில், சபைக்கு அழைக்கப்பட்டவர்களான திரு. டி.ஜே.எஸ்.ராஜகரியர் மற்றும் திரு. ஆர்.பெரேரா ஆகியோர் சில குறிப்பிட்ட வணிக நிறுவனங்களை கணக்காய்வு செய்யும் தொழிலசார் கணக்காளர்களின் நிறுவனங்களில் பங்குதாரர்களாகப் பணியாற்றினர். மேலும், குறிப்பிட்ட காலகட்டத்தில், திறைசேரிப் பிரதிநிதியான செல்வி வி.அமரசேகர, சபையின் அவதானிப்பாளராகப் பணியாற்றினார்.

சபையின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக, சபையினது அனைத்து உறுப்பினர்கள், அழைப்பாளர்கள் மற்றும் அவதானிப்பாளர்கள், இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை மற்றும் குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்களுடனான தங்களின் தொடர்புடைய தரப்பு உறவுகளை காலாண்டு அடிப்படையில் வெளிப்படுத்துகின்றனர். அதன்படி, ஒரு குறிப்பிட்ட வணிக நிறுவனம் அல்லது அதன் கணக்காய்வாளர் தொடர்பான விடயங்கள் குறித்த அனைத்து ஆவணங்களும், சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் அல்லது அதன் கணக்காய்வாளருடன் தொடர்பு கொண்ட உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும் ஆவணங்களிலிருந்து தவிர்க்கப்படுகின்றன. மேலும், அத்தகைய உறுப்பினர்கள் அந்த குறிப்பிட்ட வணிக நிறுவனம் அல்லது கணக்காய்வாளர்கள் தொடர்பான விடயங்களில் நடைபெறும் கலந்துரையாடல்களில் பங்கேற்பதில்லை.

இச்சபையானது திட்டமிட்டபடி கூட்டங்களைக் கூட்டியதுடன், இந்த ஆண்டில் 11 கூட்டங்களை நடத்தி இருந்தது.

ஆண்டின் போதான இச்சபையின் கலந்தாய்வுகள், ஒட்டுமொத்த செயல்பாட்டுக் குறிகாட்டிகளின் அடிப்படையில் பணியாளர்களின் செயலாற்றல் மற்றும் குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்கள் தொடர்பான குறிப்பிடத்தக்க தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன. குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்களால் நியமங்கள் பின்பற்றப்படாதது தொடர்பான சிக்கல்கள், ஆண்டு நிதிநிலை அறிக்கைகள், ஆண்டு வரவு செலவுத் திட்டம் மற்றும் சபையின் செயல் திட்டம் ஆகியவற்றை அங்கீகரிப்பதிலும் இச்சபையானது கவனம் செலுத்தியது. மேலும், இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் திறமையான செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவ தகவல் அமைப்பின் மேம்பாட்டு முன்னேற்றத்தையும், தற்போது திருத்தப்பட்டு இறுதிக்கட்டத்தில் உள்ள இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை சட்டத் திருத்தங்களையும் இச்சபை மீளாய்வு செய்வதில் ஈடுபட்டிருந்தது.

மேலும், தொழில்நுட்பப் பணிகள் மற்றும் முக்கிய நிர்வாகப் பணிகளைச் செய்வதற்குப் பொருத்தமான தொழிலசார் ஊழியர்களை ஈர்க்க முடியாத தொடர்ச்சியான சிக்கலைத் தீர்ப்பதற்கும், பொருத்தமான ஊழியர்களைப் பணியமர்த்துவதற்கு வழங்கப்படும் சம்பள விகிதங்கள் கவர்ச்சிகரமாக இல்லாத பிரச்சினைகளைக் களைவதற்கும் சபையானது ஒரு ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொண்டது. இந்தச் செயல்பாட்டில், இச்சபையானது நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் பலமுறை கலந்துரையாடியதுடன், மேற்பார்வைப் பணிகளைத் திறமையுடன் ஆற்றுவதற்காக மாற்றுப் பணியாளர் முறைகளையும் ஆய்வு செய்தது.

சபையின் அதிகாரப் பகிர்வுக் கொள்கையின்படி, தகவல் சேகரித்தல், நிதிநிலை அறிக்கைகளை ஆய்வு செய்தல், கணக்காய்வுகளை பரிசீலித்தல், விசாரணைகளை நடத்துதல் மற்றும் பொது விழிப்புணர்வு நடவடிக்கைகளை நடத்துதல் போன்ற நியமங்களுக்கு இணங்குவதைக் கண்காணிப்பது தொடர்பான வழக்கமான செயல்பாடுகள், பணிப்பாளர் நாயகம் மற்றும் இரண்டு பிரதி பணிப்பாளர் நாயகங்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், கிடைக்கப்பெற்ற ஊழியர்களால் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்டன.

ii. கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்காய்வு குழுவின் கட்டமைப்பு

இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் கணக்காய்வு குழுவானது, நிதி அறிக்கை, உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உள்ளக மற்றும் வெளியகத் கணக்காய்வு செயல்முறைகள் தொடர்பான அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுவதற்காக, முறைப்படி அமைக்கப்பட்ட ஒரு உட்குழுவாகச் செயல்படுகிறது.

2025 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த நிதியாண்டில், கணக்காய்வு குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது

திரு. எஸ்.எம்.எஸ்.எஸ். பண்டார - தவிசாளர்

திருமதி. ஏ.யூ. தெலகே - உறுப்பினர்

திருமதி. எம்.டி.ஐ.வி. அமரசேகர - உறுப்பினர்

திருமதி. எல்.டி.ஆர்.எல். லியனகே - கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி - அவதானிப்பாளர்

உறுப்பினர் அல்லாத செயலாளர் - திருமதி.கலனி ஹெட்டியாராச்சி (மேற்பார்வை பணிப்பாளர்)

ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்

உறுப்பினர்கள் கணக்கீட்டு, கணக்காய்வு, நிதி மற்றும் நிர்வாக ஆளுகை ஆகியவற்றில் தகுந்த நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் கொண்டிருப்பதால், குழு தனது பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்ற முடிகிறது.

தேவைப்படும்போது இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் பிரதிநிதிகளும் அவதானிப்பாளர்களாகக் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

கணக்காய்வு குழுவின் கூட்டங்கள்

மீளாய்வாண்டில் கணக்காய்வு குழு மூன்று (3) முறை கூடியது. கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலில் நிதி அறிக்கை, உள்ளகக் கட்டுப்பாடு, உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வு மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல் தொடர்பான விடயங்கள் அடங்கியிருந்தன.

உறுப்பினர்	கலந்துகொண்ட கூட்டங்கள்
திரு. எஸ்.எம்.எஸ்.எஸ். பண்டார - தவிசாளர்	3/3
திருமதி. ஏ.யூ. தெலகே - உறுப்பினர்	3/3
திருமதி. எம்.டி.ஐ.வி. அமரசேகர - உறுப்பினர்	3/3
திருமதி. எல்.டி.ஆர்.எல். லியனகே - கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி - அவதானிப்பாளர்	2/3

கணக்காய்வு குழுவின் பொறுப்புகள்

கணக்காய்வு குழுவின் முதன்மைப் பொறுப்புகளில் பின்வருவன அடங்கும்::

- துல்லியம், முழுமை மற்றும் பொருந்தக்கூடிய இலங்கை பொதுத்துறை கணக்கியல் தராதரங்கள் மற்றும் சட்டரீதியான தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக, சபையினது நிதி அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.
- உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயல்முறைகளின் போதுமான தன்மை மற்றும் செயல்திறனை மதிப்பீடு செய்தல்.
- உள்ளக கணக்காய்வாளர்களின் நியமனம் குறித்துப் பரிந்துரைகளை வழங்குதல்.
- உள்ளகத் கணக்காய்வு அறிக்கைகளையும், அவற்றுக்கான நிர்வாகத்தின் பதில்களையும் மீளாய்வு செய்தல்.
- கணக்காய்வு நாயகத்தால் நடத்தப்பட்ட வெளிப்புறத் கணக்காய்வின் நோக்கம், கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகளைக் கருத்தில் கொள்ளுதல்.
- இச்சபைக்குப் பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதைக் கண்காணித்தல்.

நிதி அறிக்கையிடல்

கணக்காய்வு குழு, 2025 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டு நிதிக் கூற்றுகளை, சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மீளாய்வு செய்தது.

நிதிக் கூற்றுக்கள் சபையின் நிதி நிலையின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிப்பதாகவும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டரீதியான தேவைகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் குழு திருப்தி அடைந்துள்ளது.

உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம்

கணக்காய்வு குழு, ஆண்டில் நடைமுறையில் உள்ள உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பின் போதுமான தன்மையை ஆய்வு செய்தது. முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கணக்காய்விடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் உறுதிமொழிகளின் அடிப்படையில், உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ அமைப்புகள் போதுமானதாகவும், தொடர்ச்சியான மேம்பாட்டிற்கு உட்பட்டு திறம்பட செயல்படுவதாகவும் குழு கருதுகிறது

உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு குழுவானது, உள்ளக் கணக்காய்வு திட்டம் மற்றும் முக்கியக் கண்டுபிடிப்புகள் உள்ளடங்கலாக ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மீளாய்வு செய்தது.

உள்ளக கணக்காய்வாளர்களால் செய்யப்பட்ட அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுக்கு இணங்க, நிர்வாகத்தால் பொருத்தமான திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன அல்லது தொடங்கப்பட்டுள்ளன.

வெளியக கணக்காய்வு

இலங்கையின் கணக்காய்வாளர் நாயகம் இவ்வாண்டு சபையினது வெளியக கணக்காய்வாளராகப் பணியாற்றுகிறார். கணக்காய்வு குழுவானது வெளியக கணக்காய்வாளருடன் நெருங்கிய தொடர்பில் இருந்து, கணக்காய்வு கண்டுபிடிப்புகளை மீளாய்வு செய்து, கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளை நிர்வாகத்துடன் விவாதித்தது.

வெளியக கணக்காய்வாளர் ஒரு அவதானிப்பாளராக அனைத்துத் கணக்காய்வு குழு கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டார். இது, ஒழுங்குமுறை மற்றும் இணக்கத் தேவைகள், அத்துடன் ஏதேனும் கட்டுப்பாட்டு அல்லது நடைமுறை பலவீனங்கள் இருப்பின் அவை குறித்த தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவும், தங்கள் உள்ளுணர்வுகளை விவாதிக்கவும் குழுவிற்கு வழிவகுத்தது.

வெளியக கணக்காய்வார்களுக்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்பின் அளவிலும், கணக்காய்வு குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளிலும் குழு திருப்தி அடைந்துள்ளது.

நல்லாட்சி

கணக்காய்வு குழுவானது, தொடர்புடைய அரசாங்கச் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதன் மூலம், நல்லாட்சியையும் ஒரு செயலூக்கமான நிறுவனக் கலாசாரத்தையும் மேம்படுத்துவதற்குப் பங்களிக்கிறது.

முடிவுரை

மீளாய்வுக்குட்பட்ட நிதியாண்டில் தமது பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றியுள்ளதாகவும இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபைக்குள் சிறந்த நிதி முகாமை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதி செய்வதற்கான தகுந்த செயல்முறைகள் நடைமுறையில் உள்ளதாகவும் கணக்காய்வு குழு கருதுகிறது.

S.Bandara

திரு. எஸ்.எம்.எஸ்.எஸ். பண்டார
தவிசாளர்- கணக்காய்வுக் குழு
இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை
27.02.2026

ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்

iii. நியமனம் மற்றும் ஊதியக் குழுவின் அறிக்கை

இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் ஊதியக் குழுவானது, சபையினது ஒரு உட்குழுவாகச் செயல்பட்டு, ஊதியக் கொள்கை, சம்பளக் கட்டமைப்புகள் மற்றும் அது தொடர்பான மனிதவள விவகாரங்கள் குறித்த அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுகிறது.

ஊதியக் குழுவின் அமைப்பு

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், ஊதியக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது:

- செல்வி. கே.எம்.ஏ.என்.தெளலகல - தவிசாளர்
- திரு. என்.குணவர்தன - உறுப்பினர்
- திரு. டி.எச். சுபசிங்க - உறுப்பினர்
- செல்வி. ஆர்.எம்.ஆர்.டி. ராஜபக்ஷ - உறுப்பினர்
- செல்வி. எம்.டி.ஐ.வி. அமரசேகர - உறுப்பினர்
- உறுப்பினர் அல்லாத செயலாளர் - செல்வி.ஏ.எம். மொஹொட்டி (பணிப்பாளர் நாயகம்) 31 ஆகஸ்ட் 2025 வரை
- உறுப்பினர் அல்லாத செயலாளர் - திரு.எச்.கே.எஸ். ஹல்லோலுவ (பணிப்பாளர் நாயகம்) 1 செப்டம்பர் 2025 முதல் அமுலில

குழு உறுப்பினர்கள் ஆளுகை, மனிதவள முகாமை மற்றும் பொதுத்துறை நிர்வாகம் ஆகியவற்றில் தகுந்த அனுபவத்தைக் கொண்டுள்ளனர்.

வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

ஊதியக் குழுவின் முக்கியப் பொறுப்புகளில் பின்வருவன அடங்கும்::

- பொருந்தக்கூடிய அரசாங்கச் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க ஊதியக் கொள்கைகளை மதிப்பாய்வு செய்து பரிந்துரைத்தல்.
- ஊழியர்களுக்குப் பொருந்தக்கூடிய சம்பளக் கட்டமைப்புகள், படிகள் மற்றும் சலுகைகளை மதிப்பாய்வு செய்தல்.
- உயர் நிர்வாகம் தொடர்பான ஊதிய விடயங்களில் பரிந்துரைகளை வழங்குதல்.
- ஊதிய நடைமுறைகள் நிறுவனத்தின் நோக்கங்கள், சமத்துவம் மற்றும் நிலைபேற்றுத்தன்மைக்கு ஆதரவளிப்பதை உறுதி செய்தல்.
- பொருத்தமான இடங்களில், ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள் மற்றும் ஊழியர்களைத் தக்கவைத்தல் தொடர்பான விடயங்களைக் கருத்தில் கொள்ளுதல்.

ஊதியக் குழுவின் கூட்டங்கள்

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் ஊதியக் குழு இரண்டு முறை கூடியது. இந்தக் கூட்டங்கள், பணியாளர் ஊதியம், பதவியினர் தேவைகள், ஆட்சேர்ப்புச் சவால்கள் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளக் கட்டமைப்புகளுக்கு இணங்குதல் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தின.

ஊதியக் கொள்கை மற்றும் நடைமுறைகள்

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுகோல்கள், தொடர்புடைய திறைசேரி சுற்றறிக்கைகள் மற்றும் பொதுத்துறை கொள்கைகளுடன் இணக்கத்தை உறுதி செய்வதற்காக, ஊதியக் குழு இந்த ஆண்டில் தற்போதுள்ள ஊதியக் கட்டமைப்பை மதிப்பாய்வு செய்தது.

மேலும், பொருத்தமான தகுதியுள்ள தொழில்சார் பணியாளர்களை ஈர்ப்பதிலும் தக்கவைப்பதிலும் உள்ள சவால்களையும் இக்குழு பரிசீலித்ததுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஒப்புதலுக்கு உட்பட்டு, சாத்தியமான நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளையும் சபைக்கு வழங்கியது

சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல்

ஊதியம் தொடர்பான அனைத்து முடிவுகளும் பரிந்துரைகளும், பொருந்தக்கூடிய அரசாங்கச் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், கொள்கைகள் மற்றும் திறைசேரி மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க எடுக்கப்படுவதை ஊதியக் குழு உறுதி செய்தது..

முடிவுரை

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் ஊதியக் குழு தனது பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றியுள்ளது என்றும், இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள் கண்காணிப்பு சபையின் ஊதிய நடைமுறைகள் நியாயமானவை, வெளிப்படையானவை மற்றும் சட்ட, ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணக்கமானவை என்றும் ஊதியக் குழு கருதுகிறது.



திருமதி. கே.எம்.ஏ.என். தவுலகல
தவிசாளர்- ஊதியக் குழு
இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை
27.02.2026

ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்

iv. இடர் பகுப்பாய்வு - 2025 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது

1. அறிமுகம்

இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை இடர் முகாமைத்துவத்தினை ஒரு முக்கிய ஆளுகைப் பொறுப்பாகக் கருதி, அதில் ஒரு செயலூக்கமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது. இந்த அறிக்கை, 2025 இல் அடையாளம் காணப்பட்ட முக்கிய இடர்களை கோடிட்டுக் காட்டுகிறது, இடர் தணிப்பு உத்திகளை மதிப்பீடு செய்கிறது, மேலும் சபையின் இடர், கட்டுப்பாடு, நெறிமுறைகள் மற்றும் இணக்கக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முன்முயற்சிகளை முன்வைக்கிறது.

இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை இடர் முகாமைத்துவத்தினை ஒரு முக்கிய ஆளுகைப் பொறுப்பாகக் கருதி, அதில் ஒரு செயலூக்கமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது. இந்த அறிக்கை, 2025 இல் அடையாளம் காணப்பட்ட முக்கிய இடர்களை கோடிட்டுக் காட்டுகிறது, இடர் தணிப்பு உத்திகளை மதிப்பீடு செய்கிறது, மேலும் சபையின் இடர், கட்டுப்பாடு, நெறிமுறைகள் மற்றும் இணக்கக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முன்முயற்சிகளை முன்வைக்கிறது.

2. இடர் முகாமைத்துவ கட்டமைப்பு

இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் இடர் முகாமைத்துவ அணுகுமுறைக்கு, உத்திசார், செயல்பாட்டு, நிதிசார், இணக்க மற்றும் நற்பெயர்சார் இடர்களைத் தொடர்ச்சியாக அடையாளம் காணுதல், மதிப்பிடுதல், தணித்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவை தேவைப்படுகின்றன.

சபையானது மூன்று அடுக்கு பாதுகாப்பு மாதிரியைப் பின்பற்றுகிறது:

எங்கள் ஆளுகை உத்தியானது மூன்று அடுக்கு பாதுகாப்பு மாதிரியை அடிப்படையாகக் கொண்டது. செயல்பாட்டு முகாமைத்துவம் (முதல் அடுக்கு) இடர்களை அடையாளம் கண்டு தணிப்பதற்கான முதன்மைப் பொறுப்பைக் கொண்டுள்ளது. எங்கள் இடர் மற்றும் இணக்கச் செயல்பாடு (இரண்டாம் நிலை) இதற்கு ஆதரவளிக்கிறது. இது, எங்கள் நடைமுறைகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் தொடர்புடைய அரசாங்கச் சட்டங்களுடன் இணக்கமாக இருப்பதை உறுதிசெய்ய மேற்பார்வை வழங்குகிறது. இறுதியாக, எங்கள் உள்ளக கணக்காய்வு (மூன்றாம் நிலை), இந்த ஆளுகைக் கட்டமைப்புகளின் செயல்திறன் குறித்து சபைக்கும் கணக்காய்வு குழுவிற்கும் சுதந்திரமான உறுதிப்பாட்டை வழங்குகிறது.

3. முக்கிய இடர்கள் மற்றும் இடர் பகுப்பாய்வு (2025)

3.1 இடர் விபரக்குறிப்பு

இடர் வகை	முக்கிய இடர் பகுதி	இடர் விபரம்	தாக்கம்	நிகழ்தகவு	ஒட்டுமொத்த இடர் மதிப்பீடு	முக்கிய தணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
வியூக ரீதியான	ஒழுங்குமுறை செயல்திறன்	கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகளுக்கு இணங்காத நிலையை உடனடியாகக் கண்டறிய இயலாமை.	உயர்	நடுத்தரம்	உயர்	நியமங்களின் தொடர்ச்சியான கண்காணிப்பு, செயலூக்கமுள்ள தொழில்நுட்பக் குழுக்கள்.
மனித மூலதனம்	திறமை தக்கவைப்பு மற்றும் திறன்	.	உயர்	உயர்	உயர்	
செயல்பாட்டு ரீதியான	ஆய்வுத் திறன்	சந்தைப் போட்டியின் காரணமாகத் திறமையான தொழில்நுட்பப் பணியாளர்களை இழத்தல், இது ஆய்வுத் தரம் மற்றும் நிறுவன அறிவைப் பாதிக்கிறது.	நடுத்தரம்	நடுத்தரம்	நடுத்தரம்	கட்டமைக்கப்பட்ட தொழில் பாதைகள், தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு, அறிவுப் பரிமாற்ற வழிமுறைகள் மற்றும் ஆவணப்படுத்தல்.
தொழில்நுட்பம் / வெளிப்புறம்	ஒழுங்குமுறைக் குட்பட்டவர்களால் பயன்படுத்தப்படும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம்		நடுத்தரம்	நடுத்தரம்	நடுத்தரம்	அறிவுப் பரிமாற்ற வழிமுறைகள் மற்றும் ஆவணப்படுத்தல்.

ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்

iv. இடர் பகுப்பாய்வு - 2025 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது (தொடர்ச்சி)

3. முக்கிய இடர்கள் மற்றும் இடர் பகுப்பாய்வு (2025) (தொடர்ச்சி)

3.1 **இடர் விபரக்குறிப்பு**

இடர் வகை	முக்கிய இடர் பகுதி	இடர் விபரம்	தாக்கம்	நிகழ்தகவு	ஒட்டுமொத்த இடர் மதிப்பீடு	முக்கிய தணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
நன்மதிப்பு	பொது நம்பிக்கை	சரியான நேரத்தில் ஆய்வுகளையும் விசாரணைகளையும் நடத்துவதற்குப் போதுமான செயல்பாட்டுத் திறன் இல்லாமை.	உயர்	நடுத்தரம்	உயர்	வளத் திட்டமிடல், அதிக இடர் கொண்ட நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளித்தல்,
தகவல் பாதுகாப்பு	சைபர் பாதுகாப்பு மற்றும் தரவு மீறல்		உயர்	நடுத்தரம்	உயர்	முகாமைத் தகவல் அமைப்பைத் திறம்படப் பயன்படுத்துதல்.
தரவு ஆளுகை	தரவு ஒருமைப்பாடு மற்றும் தனியுரிமை	கணக்காய்வு நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் மேம்பட்ட கணக்காய்வு கருவிகளுக்கு (செயற்கை நுண்ணறிவு, தரவுப் பகுப்பாய்வு, தானியங்குத் கணக்காய்வுகள்) போதுமான ஒழுங்குமுறைப் பதில் அளிக்காமை.	நடுத்தரம்	நடுத்தரம்	நடுத்தரம்	தொழில்நுட்பத் திறன் மேம்பாடு, உள்ளகத் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை உருவாக்குதல், நிதிநிலை அறிக்கை மறுஆய்வுப் பணிக்கு செயற்கை நுண்ணறிவின் ஆதரவைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளைச் சரிபார்க்கும் முயற்சிகள்.
செயல்பாட்டு மீள்திறன்	வணிகத் தொடர்ச்சி மற்றும் பேரிடர் மீட்பு		உயர்	குறைவு	நடுத்தரம்	வெளிப்படையான அமுலாக்க நடவடிக்கைகள், செயலுக்கமுள்ள தகவல் தொடர்பு, பொது அறிக்கையிடல்.
நிதி ரீதியான	வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடுகள்	கணக்காய்வு தோல்விகள், ஒழுங்குமுறைத் தாமதங்கள் அல்லது உணரப்பட்ட அமுலாக்க பலவீனங்கள் காரணமாகப் பங்குதாரர்களின் நம்பிக்கையை இழத்தல்.	நடுத்தரம்	உயர்	உயர்	அணுகல் கட்டுப்பாடுகள், சம்பவப் பதிலளிப்புத் திட்டங்கள், தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புக் கொள்கைகளை வலுப்படுத்துதல்.
மோசடி மற்றும் நேர்மை	உள்ளக அல்லது வெளியக மோசடி		உயர்	குறைவு	நடுத்தரம்	தரவு ஆளுகைக் கட்டமைப்பு, சரிபார்ப்புக் கட்டுப்பாடுகள்.
இணக்கம்	சட்ட மற்றும் ஒழுங்குமுறை இணக்கம்	அங்கீகரிக்கப்படாத அணுகல், இணையவழித் தாக்குதல்கள் அல்லது இரகசியமான ஒழுங்குமுறைத் தகவல்களைப் பாதிக்கும் தரவு இழப்பு.	உயர்	குறைவு	நடுத்தரம்	தொலைநிலைப் பணிக்குத் தயார்நிலை, காப்பு அமைப்புகள் மற்றும் தரவு மீட்பு நடைமுறைகள்.
நெறிமுறை ரீதியான	நல முரண்பாடு		நடுத்தரம்	நடுத்தரம்	ஒட்டுமொத்த இடர் மதிப்பீடு	

ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்

iv. இடர் பகுப்பாய்வு - 2025 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது (தொடர்ச்சி)

3.2 2026 ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ இடர் முன்னெடுப்புகள்

நிதிநிலை அறிக்கை ஆய்வுகளுக்கு செயற்கை நுண்ணறிவு திறன்களைச் செயற்படுத்துவது குறித்து முதற்கட்டக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

கூட்டுக் கலந்துரையாடல்கள் மூலம், வளர்ந்துவரும் கணக்காய்வு தொழில்நுட்பங்கள் மற்றும் கணக்காய்வு வழிமுறைகளின் இற்றைப்படுத்தல்கள் குறித்த உள்ளக நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களுடன் அறிவுப் பகிர்வு அமர்வுகள் நடத்தப்படும்.

3.3 முடிவுரை

இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை ஒரு செயலூக்கமான மற்றும் மீள்திறன் கொண்ட இடர் முகாமைத்துவ கலாசாரத்திற்குத் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது. விழிப்புள்ள மேற்பார்வை, வலுவான உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான மேம்பாடு ஆகியவற்றின் மூலம், சபையானது பொது நம்பிக்கையை நிலைநிறுத்தவும், 2025 மற்றும் அதற்கு அப்பாலும் தனது ஆணையைத் திறம்பட நிறைவேற்றவும் முயல்கிறது.

v. மோசடி தடுப்பு உபாயங்கள்

ஒருங்கிணைப்பையும் பொது நம்பிக்கையையும் சீர்குலைக்கக்கூடிய ஒரு முக்கிய அபாயமாக மோசடியை இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள் கண்காணிப்பு சபை யானது 2025 இல் பின்வரும் உத்திகளைச் செயல்படுத்துவதன் மூலம் மோசடி தடுப்பு மற்றும் கண்டறிதலைத் தொடர்ந்து வலுப்படுத்தியது:

மோசடி அபாய மதிப்பீடு

வணிகச் செயல்முறைகளில் மோசடி அபாயக் கருத்தாய்வுகளை ஒருங்கிணைத்தல்.

உள்ளக அறிக்கை மற்றும் முறைகேடு தெரிவிப்போர் வழிமுறைகள்

புகார்கள் மற்றும் விசாரணைகள் குறித்த இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள் கண்காணிப்பு சபையின் இணையதளத்தில் இணைய அடிப்படையிலான விருப்பு வசதி. பணியாளர்கள் தங்கள் பிரச்சினைகளை உடனடி மேற்பார்வையாளரிடம் தெரிவிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

புகாரை ஏற்றுக்கொண்டதற்கான ஒப்புதல், பூர்வாங்க மதிப்பீடு, விசாரணை, முடிவு அறிக்கையிடல் ஆகியவற்றுக்கான தெளிவான நடைமுறைகள்.

மோசடிக் கட்டுப்பாடுகள்

பணிகளைப் பிரித்தல் (எ.கா. பணம் செலுத்துவதற்கான ஒப்புதல்கள், கொள்முதல், செலவுத் தொகையைத் திரும்பச் செலுத்துதல்).

நிதிப் பரிவர்த்தனைகளுக்கான வழக்கமான சரிபார்ப்பு மற்றும் விதிவிலக்கு அறிக்கையிடல். நிதிச் செயல்பாட்டைக் கண்காணிப்பதில் பகுப்பாய்வு நடைமுறைகளைப் பயன்படுத்துதல்.

vi. இணக்க அறிக்கை

இல	இணக்கப் பகுதி	தேவை	இணக்கம்
1.	அரசாங்கச் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், கொள்கைகள்	சம்பந்தப்பட்ட அரசாங்கச் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், கொள்கைகளுக்கு இணங்குதல்	✓
2.	மனித வள ஒழுங்குமுறைகள்	மனிதவளக் கொள்கைகள் மற்றும் சேவை விதிகளுக்கு இணங்குதல்	✓
3.	உள்ளக கணக்காய்வு சாசனம்	அங்கீகரிக்கப்பட்ட வரையறையின்படி உள்ளகத் கணக்காய்வு செயல்படுதல்	✓
4.	இடர் முகாமைத்துவம	இடர் முகாமைத்துவ கட்டமைப்பு நடைமுறையில் இருத்தல் மற்றும் செயல்பாட்டில் இருத்தல்	✓
5.	நிறுவன ஆளுகை	சபை நிர்வாக மேற்பார்வையானது ஆளுகைத் தரநிலைகளைப் பூர்த்தி செய்தல்	✓
6.	நெறிமுறைகள் மற்றும் நேர்மை	நடத்தை விதிகள் / நெறிமுறைக் கொள்கைகளுக்கு இணங்குதல்	✓
7.	பதிவு பராமரிப்பு	முறையான ஆவணப்படுத்தல் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்	✓
8.	தகவல் பாதுகாப்பு	தகவல் பாதுகாப்புக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருத்தல்	✓

மீளாய்வு ஆண்டில், இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையானது, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், தொடர்புடைய அரசாங்கச் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் கொள்கைகளுக்கு இணங்கிச் செயல்பட்டது.

இந்தத் தேவைகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் திறமையான செயலாக்கத்தை உறுதி செய்வதற்காக, ஒரு கட்டமைக்கப்பட்ட உள்ளக இணக்கக் கட்டமைப்பு பராமரிக்கப்பட்டது. நிறுவனம் முழுவதும் ஒரு வலுவான இணக்கப் பண்பாட்டை ஆதரிப்பதற்காக, நிர்வாகம் விழிப்புணர்வு, பொறுப்புக்கூறல் மற்றும் சரியான நேரத்தில் அறிக்கையிடுதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தது.

இந்தத் தேவைகள் பின்பற்றப்படுவதைக் கண்காணிக்க உள்ளக இணக்க பொறிமுறைகள் நடைமுறையில் இருந்தன. இந்த ஆண்டில் இணக்கமின்மையின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் எதுவும் கண்டறியப்படவில்லை. உள்ளக மதிப்பாய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட சிறிய நடைமுறை விடயங்கள் நிர்வாகத் தன்மை கொண்டவையாக இருந்தன, மேலும் அவை செயல்பாடுகள் அல்லது நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக, இந்த விடயங்கள் திருத்த நடவடிக்கைகள், செயல்முறை மேம்பாடுகள் மற்றும் நிர்வாக மேற்பார்வை மூலம் உடனடியாகச் சரிசெய்யப்பட்டன.

ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்

vi. இணக்க அறிக்கை (தொடர்ச்சி)

இணக்கக் கண்காணிப்பு நடவடிக்கைகள்

இணக்க உறுதிப்பாட்டை வலுப்படுத்த, இந்த ஆண்டில் பின்வரும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- உள்ளகக் கொள்கைகளின் காலமுறை மதிப்பாய்வுகள் மற்றும் சட்டப்பூர்வ புதுப்பிப்புகளுடன் அவற்றைச் சீரமைத்தல்.
- இணக்க செயல்முறைகளைச் சரிபார்க்க உள்ளகத் கணக்காய்வாளர்களுடன் ஈடுபடுதல்.

மீளாய்வு ஆண்டு முழுவதும் இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை ஒரு செயல்திறன் மிக்க இணக்கக் கட்டமைப்பைப் பராமரித்தது என்பதில் சபை திருப்தி அடைகிறது. நடைமுறையில் உள்ள அமைப்புகளும் செயல்முறைகளும், நிறுவனம் தனது செயல்பாடுகளைப் பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க நடத்தியது என்பதற்கு நியாயமான உத்தரவாதத்தை வழங்கின. தொடர்ச்சியான கண்காணிப்பு, உள்ளகக் கட்டுப்பாடுகளில் சரியான நேரத்தில் புதுப்பிப்புகள் மற்றும் சிறந்த ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரிப்பதற்காகத் கணக்காய்வாளர்களுடன் தொடர்ச்சியான ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் இணக்க நடைமுறைகளை வலுப்படுத்துவதில் நிர்வாகம் உறுதியாக உள்ளது

vii. நெறிமுறைகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள்

நேர்மை மற்றும் அறநெறி நடத்தை ஆகியவை இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள் கண்காணிப்பு சபையின் நோக்கத்தின் மையமாக உள்ளன. 2025 ஆம் ஆண்டில், சபை தனது அறநெறி மற்றும் ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பை பின்வருவனவற்றின் மூலம் வலுப்படுத்தியது

நடத்தை விதிகள்

அனைத்து சபை உறுப்பினர்களும் பணியாளர்களும் நேர்மை, பாரபட்சமின்மை மற்றும் தொழில்முறை ஆகியவற்றை வலியுறுத்தும் ஒரு முறையான நடத்தை விதிகளுக்குக் கட்டுப்பட்டவர்களாகும்.

அனைத்துப் பணியாளர்களும் இந்த விதிகளை ஏற்றுக்கொள்வது அவசியமாகும்.

ஊழல் எதிர்ப்பு கொள்கை

ஊழல் நடைமுறைகளுக்குத் தெளிவான வரையறையானது இலஞ்சம் அல்லது முறையற்ற செல்வாக்கிற்குச் சற்றும் இடமில்லை.

நலன் முரண்பாடு அறிவிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கான நடைமுறைகள்.

நெறிமுறைப் பயிற்சி

நெறிமுறைகள் மற்றும் நேர்மை தொடர்பான விடயங்களைக் கண்காணிக்கவும், தேவைக்கேற்ப வழிகாட்டுதல் வழங்கவும், இந்த ஆண்டு முழுவதும் ஒரு நெறிமுறைக் குழு செயல்பட்டது.

வெளிப்படுத்தல்கள் மற்றும் வெளிப்படைத்தன்மை

தேவைப்படும் இடங்களில் சபை உறுப்பினர்களின் நலன்களை வெளிப்படுத்துதல்.

போட்டி விலைமனுக்கள் மற்றும் கணக்காய்வு பரிசோதனைகள் மூலம் கொள்முதல் மற்றும் ஒப்பந்தங்களில் வெளிப்படைத்தன்மை.

2025 ஆம் ஆண்டில் நெறிமுறைக் கொள்கையின் குறிப்பிடத்தக்க மீறல்களோ அல்லது ஊழல் சம்பவங்களோ நிகழவில்லை.

viii. உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீடு பற்றிய அறிக்கை

செயல்திறன், இணக்கம் மற்றும் பொறுப்புடைமையை உறுதி செய்வதற்கு ஒரு வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு இன்றியமையாதது. 2025 ஆம் ஆண்டின் முக்கியச் செயல்பாடுகள் பின்வருமாறு:

கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு

பின்வரும் பகுதிகளை மையமாகக் கொண்டு கட்டுப்பாடுகள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன:

ஆளுகை மற்றும் மேற்பார்வை: கணக்காய்வு குழுவின் வழக்கமான மீளாய்வு.

நிதிக் கட்டுப்பாடுகள்: கணக்கிணக்கக் கட்டுப்பாடுகள், அங்கீகார வரம்புகள் மற்றும் வரவுசெலவுத் திட்ட நெறிமுறைகள்.

தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள்: அணுகல் கட்டுப்பாடு மற்றும் வழக்கமான காப்புப் பிரதிகள்.

செயல்பாட்டுக் கட்டுப்பாடுகள்: நியம இயக்க நடைமுறைகள், பணிப்பாய்வு ஒப்புதல்கள் மற்றும் செயலாற்றுகை கண்காணிப்பு.

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

ஆண்டின் பிற்பகுதியில், உள்ளக கணக்காய்வு பின்வருவனவற்றை உள்ளடக்கிய இடர் அடிப்படையிலான கணக்காய்வுத் திட்டத்தைச் செயல்படுத்தியது:

- ✓ நிதிச் செயல்பாடுகள்
- ✓ கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்குதல்
- ✓ தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் தரவுப் பாதுகாப்பு
- ✓ முக்கிய செயல்முறை மீளாய்வுகள்

கட்டுப்பாடுகளைச் சோதித்தல்

முக்கியக் கட்டுப்பாடுகளை (எ.கா., கொள்முதல், சம்பளப் பட்டியல், நிதி அறிக்கையிடல்) அவ்வப்போது பரிசோதித்ததில், பாதிப்புகளைக் குறைக்கும் நடவடிக்கைகளின் செயல்திறன் உறுதிசெய்யப்பட்டது. கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் சிறிய அளவில் இருந்ததோடு சீர் செய்யவும் பட்டன.

முக்கிய சவால்கள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள்

i. செயல்பாட்டு மற்றும் தந்திரோபாய சவால்கள்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் நியமங்கள் கண்காணிப்புச் சபை, நாடு முழுவதும் உயர்தரமான நிதி அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வுத் நியமங்களை உறுதி செய்வதில் ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. ஒழுங்குமுறை மேற்பார்வை மற்றும் திறனை வலுப்படுத்துவதில் இந்த அமைப்பு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருந்தாலும், தனது கடமையை முழுமையாக நிறைவேற்றும் திறனைப் பாதிக்கும் செயற்பாட்டு மற்றும் உத்திசார் சவால்களை அது தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது.

- **மனித மூலதனம் மற்றும் திறன் முகாமைத்துவம்**

திறமையான தொழில்நுட்ப மற்றும் நிர்வாகப் பணியாளர்களை ஈர்ப்பதும் தக்கவைப்பதும் ஒரு தொடர்ச்சியான சவாலாகவே உள்ளது. தகுதிவாய்ந்த கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நிபுணர்களுக்கான சந்தைப் போட்டியும், நிலவும் சந்தைத் தரநிலைகளை விடக் குறைவான ஊதிய அளவுகளும் இணைந்து, அதிக பணியாளர் இடமாற்றத்திற்கு வழிவகுத்துள்ளன. இது நிறுவனத்தின் அறிவுத் தொடர்ச்சியைப் பாதிக்கிறது, செயற்பாட்டுத் திறனைக் குறைக்கிறது, மேலும் நிதிநிலை அறிக்கை ஆய்வுகள் மற்றும் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அதன் செயல்பாட்டு வரம்பைக் கட்டுப்படுத்துகிறது. கட்டமைக்கப்பட்ட தொழில் பாதைகளை உருவாக்குவதும், தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகளை அதிகரிப்பதும் இந்தச் சவாலைக் குறைப்பதற்கு இன்றியமையாதவையாக இருக்கின்றன.

- **செயல்பாட்டுத் திறன் மற்றும் தர மேற்பார்வை**

குறிப்பிட்ட வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும், மாறிவரும் அறிக்கையிடல் தேவைகளாலும் கண்காணிப்புச் சபையின் பணிச்சுமை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறைந்த பணியாளர் எண்ணிக்கையும், கைமுறை செயன்முறைகளைச் சார்ந்திருப்பதும் நிதிநிலை அறிக்கை ஆய்வுகள், கணக்காய்வுகள் மற்றும் இணக்க ஆய்வுகளை உரிய நேரத்தில் செயல்படுத்துவதைத் தடுக்கக்கூடும். நம்பகத்தன்மையையும் பொது நம்பிக்கையையும் நிலைநிறுத்த, அளவுசார்ந்த இலக்குகளைத் தரம் சார்ந்த மதிப்பீடுகளுடன் சமநிலைப்படுத்துவது மிகவும் அவசியமாகும். செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு, முகாமைத்துவ தகவல் முறைமையினைத் திறம்படப் பயன்படுத்துவதும், செயன்முறைத் தன்னியக்கத்தை ஏற்றுக்கொள்வதும் முக்கியமாகும்.

- **தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் வளர்ந்து வரும் கணக்காய்வு நடைமுறைகள்**

செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வு ஆகியவற்றின் பயன்பாடு உள்ளிட்ட விரைவான தொழில்நுட்ப முன்னேற்றங்கள், ஒரு இரட்டைச் சவாலை முன்வைக்கின்றன. அவை செயற்திறன் மேம்பாடுகளை வழங்கினாலும், மேற்பார்வைத் திறன்களைப் பராமரிப்பதற்காக கண்காணிப்புச் பணியாளர்கள் தங்கள் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைத் தொடர்ந்து புதுப்பிக்க வேண்டிய தேவையையும் ஏற்படுத்துகின்றன. வளர்ந்து வரும் கணக்காய்வு வழிமுறைகளிலுள்ளக தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதற்கு, கட்டமைக்கப்பட்ட அறிவுப் பகிர்வு அமர்வுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களுடனான ஈடுபாடு மற்றும் சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் ஆகியவை இன்றியமையாதவையாகும்.

- **ஒழுங்குமுறை மற்றும் இணக்கக் கட்டமைப்பு**

கண்காணிப்புச் சபையானது, தற்போது சட்டத் திருத்தக் குழுவின் மூலம் திருத்தத்திற்காக விவாதிக்கப்பட்டு வரும் ஆளும் சட்டத்தின் கட்டமைப்பிற்குள் செயற்படுகிறது. சிறு வணிக நிறுவனங்களை அடையாளம் காண்பதற்கான ஒழுங்குமுறை அளவுகோல்கள் சந்தை நிலவரங்களுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்வது ஒரு தொடர்ச்சியான சவாலாக உள்ளது. மேலும், இந்த அமைப்பு நெறிமுறைத் தரங்கள், மோசடித் தடுப்பு மற்றும் ஆளுகை ஆகியவற்றில் ஒரு செயலூக்கமான அணுகுமுறையைப் பராமரிக்க வேண்டும். உள்ளக இணக்க வழிமுறைகளை வலுப்படுத்துவதும், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை வளர்ப்பதும் ஒழுங்குமுறை செயல்திறனுக்கு மிகவும் முக்கியமானவை.

- **நிதி மற்றும் வளக் கட்டுப்பாடுகள்**

அரசாங்க நிதியுதவியைச் சார்ந்திருப்பது, சபையின் திறனை விரிவுபடுத்துவதற்கும், பெரிய அளவிலான மூலோபாய முன்னெடுப்புகளைச் செயல்படுத்துவதற்கும், மேம்பட்ட தொழில்நுட்பங்கள் அல்லது வெளி நிபுணத்துவத்தில் முதலீடு செய்வதற்கும் உள்ள நெகிழ்வுத்தன்மையைக் கட்டுப்படுத்துகிறது. அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதும், வள ஒதுக்கீட்டை உகந்ததாக்குவதும் இந்த நிதி நெருக்கடிகளைக் கடப்பதற்கான அத்தியாவசிய உத்திகளாகும்.

- **பங்குதாரர் நம்பிக்கை மற்றும் பொதுமக்களின் கருத்து**

பொது நம்பிக்கையைப் பேணுவது கண்காணிப்புச் சபையின் நோக்கத்தின் மையமாகும். ஒழுங்குமுறை நடவடிக்கைகளில் ஏற்படும் எந்தவொரு தாமதமும், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களால் உணரப்படும் இணக்கமின்மையும், அல்லது கணக்காய்வுத் தோல்விகளும் பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பாதிக்கக்கூடும். சரியான நேரத்தில் அறிக்கையிடுதல், முன்முயற்சியுடன் கூடிய ஈடுபாடு, மற்றும் தரநிலைகளைத் தொடர்ச்சியாக அமுல்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவது, அமைப்பின் நம்பகத்தன்மையையும் நேர்மையையும் வலுப்படுத்த அவசியமாகும்.

கண்காணிப்புச் சபையின் செயற்பாட்டு மற்றும் மூலோபாய சவால்கள், திறன் முகாமைத்துவம், திறன் அபிவிருத்தி, தொழில்நுட்பத் தழுவல், ஒழுங்குமுறை இணக்கம், வள உகப்பாக்கம் மற்றும் பங்குதாரர் நம்பிக்கை ஆகியவற்றைச் சுற்றி அமைந்துள்ளன.

இலங்கையில் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நடைமுறைகளின் திறமையான மேற்பார்வையை உறுதி செய்வதற்கும், ஆளுகையை வலுப்படுத்துவதற்கும், நிலையான நிதி வெளிப்படைத்தன்மையை ஆதரிப்பதற்கும் இந்த சவால்களுக்கு தீர்வு காண்பது இன்றியமையாதது.

ii. பிரதான கணக்காய்வார் நாயகத்தினால் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய கணக்காய்வு விடயங்கள் மற்றும் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள்

(பக்கம் 70 முதல் 72 வரை பார்க்கவும்)

iii. எதிர்கால மேம்பாடுகளுக்கான கற்ற பாடங்கள்

ஓராண்டில் கற்றுக்கொண்ட பாடங்கள், உத்திசார்ந்த பணியாளர் திட்டமிடல், செயல்முறை நவீனமயமாக்கல், தொடர் கற்றல், இடர் அடிப்படையிலான மேற்பார்வை, வலுவான ஆளுகை மற்றும் செயலூக்கமான பங்குதாரர் ஈடுபாடு ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இந்தப் பாடங்களைப் பயன்படுத்துவதன் மூலம், கண்காணிப்புச் சபையானது தனது மேற்பார்வைத் திறனை வலுப்படுத்தவும், நிதி அறிக்கையிடல் தரத்தை மேம்படுத்தவும், இலங்கையின் நிதி அறிக்கையிடல் அமைப்பில் நீடித்த வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை ஆதரிக்கவும் இயலும்..

அடுத்த ஆண்டுகளுக்கான திட்டங்கள்

i. எதிர்கால செயற்பாடுகளுக்கான தந்திரோபாய செயற்திட்டம் (2026–2028)

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான கண்காணிப்புச் சபையின் உத்திசார் செயற்திட்டமானது, ஒழுங்குமுறை வரம்பை வலுப்படுத்துதல், செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துதல், கணக்காய்வு மற்றும் நிதி அறிக்கையிடல் தரத்தை உயர்த்துதல் மற்றும் பங்குதாரர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இந்த மூன்றாண்டு காலப்பகுதியில், கண்காணிப்புச் சபையானது திறன் நிலைப்படுத்தலில் இருந்து நிறுவன வலுவூட்டல் மற்றும் டிஜிட்டல் உருமாற்றத்திற்கு மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உத்திசார் செயற்திட்டம் வலியுறுத்துவது:

- அனைத்து சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குமான விரிவான ஒழுங்குமுறைப் பாதுகாப்பு
- நீடித்த மனித மூலதன மேம்பாடு
- இடர் அடிப்படையிலான மற்றும் தொழில்நுட்பத்தால் இயக்கப்பட்ட மேற்பார்வை
- மேம்படுத்தப்பட்ட காலந்தவறாமை, வெளிப்படைத்தன்மை மற்றும் பங்குதாரர் நம்பிக்கை

இந்த செயற்திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவது, நிதி அறிக்கையிடல் தரத்தை மேம்படுத்துவதற்கும், கணக்காய்வுத் தரங்களைச் செம்மைப்படுத்துவதற்கும், இலங்கையின் நிதி அறிக்கையிடல் அமைப்பில் பொது நலனைப் பாதுகாப்பதற்கும் கண்காணிப்புச் சபையின் திறனை வலுப்படுத்தும்.

இந்த செயல்திட்டம், குறுகிய கால நிலைப்படுத்தல் நடவடிக்கைகளை நடுத்தர மற்றும் நீண்ட கால நிறுவன வலுவூட்டல் முயற்சிகளுடன் இணைத்து, ஒரு கட்டம் கட்டமான அணுகுமுறையைப் பின்பற்றுகிறது.

ii. அடுத்த நிதியாண்டுகளுக்கான முக்கிய முன்னுரிமைகள் மற்றும் இலக்குகள்

2026 இல் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் செயற்திறனை மேம்படுத்துவதற்காக, பின்வரும் குறுகிய கால மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள் பின்பற்றப்படும்.

முக்கிய கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள்	குறுகிய கால நடவடிக்கைகள்	நடுத்தர கால நடவடிக்கைகள்
சிறு வணிக நிறுவனம் என்பதன் வரையறைக்குள் வரும் அனைத்து நிறுவனங் களையும் உள்ளடக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைப் பெறுதல் விரிவுபடுத்தப்பட வேண்டும்.	• கூட்டு ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் பிற நிறுவனங்களால் வெளியிடப்பட்ட பட்டியல்களைப் பின்தொடர்ந்து, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வரையறைக்குள் வரும் நிறுவனங்களைக் கண்டறிந்து உறுதிப்படுத்தவும • கண்டறியப்பட்ட பிற நிறுவனங்களுடன் பின்தொடர்ந்து, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவும். • நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பிப்பதற்கான தேவையைப் பரப்பவும் வலுப்படுத்தவும் கூட்டு ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஈடுபடவும்.	• தற்போது இயற்றப்பட்டு வரும் புதிய சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படும் விதிகள் மூலம் பாதுகாப்பு வரம்புகளில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்தல். • சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை முழுமையாகக் கண்டறிவதையும், அவை தொடர்ந்து இணங்குவதையும் உறுதி செய்வதற்காக, இணை ஒழுங்குமுறை அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு வழிமுறைகளை வலுப்படுத்துதல்.
பணியாளர் பற்றாக்குறை நெருக்கடியைச் சமாளித்தல்	• தொழில்முறைப் பணியாளர்களைப் பணியமர்த்தும் பணியில் வெற்றிபெற, முன்மொழியப்பட்ட சம்பளக் கட்டமைப்பிற்கு ஒப்புதல் பெறுவதற்காக, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களைத் தொடர்தல். • பணி சார்ந்த பயிற்சிகள் மற்றும் தனிநபர் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் அறிவு மேம்பாட்டை அதிகரித்தல்.	• முன்மொழியப்பட்ட சம்பளக் கட்டமைப்பிற்கு அங்கீகாரம் பெறுவதற்காக, சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்ந்து தீவிரமாகப் பங்கேற்றல். • பிணைப்பு ஏற்பாடுகளுடன் கூடிய வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளைப் பெறுவதற்காக, தற்போதைய ஊழியர்களைத் தக்கவைத்துக் கொள்ளல். • வெளிநாட்டு சக ஒழுங்குமுறை அமைப்புகளுடன் ஊழியர்கள் பணியாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடுதல். .

அடுத்த ஆண்டுகளுக்கான திட்டங்கள்

ii. அடுத்த நிதியாண்டுகளுக்கான முக்கிய முன்னுரிமைகள் மற்றும் இலக்குகள் (தொடர்ச்சி)

முக்கிய கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள்	குறுகிய கால நடவடிக்கைகள்	நடுத்தர கால நடவடிக்கைகள்
நிதிக் கூற்றுக்களின் மதிப்பாய்வுகள் மற்றும் கணக்காய்வுகளை நடத்துவதற்கு வளங்களை உகந்ததாக்குதல்.	• தொழில்துறை இடர் வெளிப்பாட்டின் அடிப்படையில், ஆய்வுக்கான நிதி அறிக்கைகளைத் தேர்ந்தெடுக்க, இடர் அடிப்படையிலான ஒரு வழிமுறையை உருவாக்கிச் செயல்படுத்தவும் • குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அனைத்து சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களையும் உள்ளடக்குவதை உறுதிசெய்ய, ஒரு கட்டமைக்கப்பட்ட தேர்வு செயன்முறையைக் கடைப்பிடிக்கவும	• மதிப்பாய்வு முடிவுகள் மற்றும் வளர்ந்து வரும் தொழில்துறை அபாயங்களைப் பயன்படுத்தி, அபாயம் சார்ந்த தேர்வு வழிமுறையைச் செம்மைப்படுத்தி மேம்படுத்துதல். • நிதிக் கூற்று ஆய்வுகள் மற்றும் கணக்காய்வு ஆய்வுகளின் செயற்திறனையும் பயனுடைமையையும் மேம்படுத்துவதற்காக, இடர் விவரங்களின் அடிப்படையில் பணியாளர்கள் மற்றும் பிற வளங்களின் ஒதுக்கீட்டை உகந்ததாக்குதல
பங்குதாரர்களுக்கு உரிய நேரத்தில் தகவல்களை வழங்குதல	• சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் தகவல்களை வழங்குதல். • சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் தகவல்களை வழங்குதல். • கணக்குத் தயாரிப்பாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் ஒரு வழிமுறையாக, கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தராதரங்களுக்கு இணங்காதது குறித்த கண்காணிப்புச் சபையின் பொதுவான கண்டுபிடிப்புகள் பற்றிய அமர்வுகளை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துடன் இணைந்து தொடர்ந்து நடத்துதல். • எடுக்கப்பட்ட அமலாக்க நடவடிக்கைகளை, ளுடுயுயுளுஆடீ இணையதளத்தில் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தொடர்ந்து வெளியிடுதல்.	• தேவைப்படும் திருத்தங்கள் பின்னர் வெளியிடப்படும் நிதிக் கூற்றுகளில் இடம்பெறுவதை உறுதிசெய்யும் வகையில், நிதிநிலை அறிக்கை மீளாய்வுகளின் கால அட்டவணையைச் சீரமைக்கவும்.
மதிப்பாய்வுப் பணியை மேம்படுத்துவதற்காக, முகாமைத்துவத் தகவல் முறைமையின் இரண்டாம் கட்டத்தைச் செயல்படுத்தல்.	• முகாமைத்துவ தகவல் முறைமையின் இரண்டாம் கட்டத்திற்குத் தேவைப்படும் முக்கிய அம்சங்களைக் கண்டறிதல்.	• இடர் அடிப்படையிலான நிதிக் கூற்று மீளாய்வுகள் மற்றும் தணிக்கை ஆய்வுகளுக்கான மேம்படுத்தப்பட்ட செயற்பாடுகளுடன், முகாமைத்துவ தகவல் அமைப்பின் இரண்டாம் கட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்தவும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. TPD/A/SLAASMB/FA/2025/18 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date ๒๗ July 2026

தலைவர்
இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் ("சபை") 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க காலக்கிரமத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிக்கூற்றுக்கள் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 g@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1.3 சபையின் 2025 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் சபையின் 2025 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்று கருத்திற் கொள்ளப்படும். இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் மேவுகை செய்யப்படாமல் இருப்பதுடன் நான் அது தொடர்பாக எவ்வித சான்றிதலொன்றோ அபிப்பிராயத்தை வெளியிடவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்குரிய எனது பொறுப்பு மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்துவதில்லை என்பதை கருத்திற் கொள்வதாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கை திகதியில் உள்ளவாறு பெற்றுக்கொண்ட தகவல்கள் மற்றம் ஏனைய தகவலகளின் பேரில் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள், போதியளவில் தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டால் அவ்விடயம் என்னால் அறிக்கையிடுவது அவசியமாகும். இது து தொடர்பில் அறிக்கையிடுவதற்கு ஒன்றுமில்லை.

1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகளையும் அறிக்கைளையும் முறையாக பேணுதல் வேண்டும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக மருத்துவ சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத:துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாக தரப்பினருடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் முறையான கணக்கீட்டு பதிவுகள் சபையினால் பேணப்பட்டிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(றை) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(ளை) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் கீழே காட்டப்பட்டவற்றை குறிப்பிடுவதற்கு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையுடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக ஆளுகை சபையின் எந்தவொரு உறுப்பினருக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் தொடர்புபட்டுள்ளதாக குறிப்பிடுவதற்கு.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஏதேனும் ஏற்புடைய எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக குறிப்பிடுவதற்கு

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அதிகாரங்கள் செயற்பாடுகள், மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக குறிப்பிடுவதற்கு.

(அ) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் படி, குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் (ளிநஉகைநைன டீரளனைநெளள நுவெநசிசளைநள -ளுஉடீநுள) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்குவதை கண்காணிப்பதே சபையின் செயற்பாடாக இருக்க வேண்டும். அதன்படி, சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்யும் மொத்தம் 1,702 வணிக நிறுவனங்கள் சபையினால் அடையாளம் காணப்பட்டன. இவற்றில், மேற்கூறிய நோக்கத்திற்காக மீளாய்வாண்டில் வணிக நிறுவனங்களின் 535 நிதிக் கூற்றுக்களின் தொகுப்புகளை மீளாய்வு செய்வதற்கு சபை திட்டமிட்டிருந்தது. இருப்பினும், 472 நிதிக் கூற்றுக்களின் தொகுப்புகள், அல்லது திட்டமிடப்பட்ட நிதிக் கூற்றுக்களின் தொகுப்புகளில் 88 சதவீதம் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், காலவரையறைக்குள்ளும் மற்றும் ஏற்புடைய சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும் குறிப்பிடுவதற்கு.

(அ) 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, சபையின் பணிக்கொடைப் பொறுப்பு ரூபா 5,876,043 ஆக இருந்தது. எவ்வாறெனினும், பணிக்கொடை நிதியில் பராமரிக்கப்பட்ட மீதி அந்தப் பொறுப்பை விட ரூபா 4,599,992 ஆல் கூடுதலாக இருந்தது. உண்மையான பணிக்கொடைப் பொறுப்பை விட கணிசமாக அதிகமாக நிதி திரட்டப்பட்டிருப்பதானது, அரசாங்க ஒதுக்கீடுகள் உண்மையான நிதித் தேவைகளுடன் துல்லியமாக சீரமைக்கப்படவில்லை என்பதைக் குறிக்கிறது. இதன் விளைவாக, நிதிகள் பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. சபையானது முதன்மையாக அரசாங்க மானியங்கள் மூலம் நிதியளிக்கப்படும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகச் செயற்படுவதால், பணிக்கொடை நிதியில் அதிகப்படியான இருப்புகளைத் தக்கவைத்துக் கொள்வது, பொது நிதிகளை சிக்கனமாகவும் மற்றும் திறமையாகவும் பயன்படுத்துவது குறித்து கவலைகளை எழுப்புகிறது.

3. ஏனைய விடயங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சபையின் பதவியணியின் எண்ணிக்கை 33 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து தேவையான அங்கீகாரத்தினைப் பெறாமல் இரண்டாம் நிலையின் கீழ் ஒரு மேலதிக பதவி உருவாக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 33 ஆக இருந்த போதிலும், உண்மையான பதவிகளின் எண்ணிக்கை 17 ஆக இருந்தது. இதன் விளைவாக 17 வெற்றிடங்களும், 01 மேலதிக பதவியும் உருவாகி இருந்தது. இது ஏறக்குறைய 50 சதவிகித வெற்றிடங்கள் இருப்பதைக் குறிக்கிறது. மேலும், பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவி 01, மேற்பார்வை பணிப்பாளர் பதவியில் 02 வெற்றிடங்கள், பிரதி மேற்பார்வை பணிப்பாளர் 6 வெற்றிடங்கள், உதவி மேற்பார்வை பணிப்பாளர் 04 வெற்றிடங்கள், நிதி மற்றும் நிர்வாக உதவி பணிப்பாளர் 01 வெற்றிடம், மற்றும் உதவிப் பணிப்பாளர் - சட்டம் 01 வெற்றிடம் உட்பட பல முக்கிய நிர்வாக மற்றும் செயற்பாட்டுப் பதவிகளில் குறிப்பிடத்தக்க வெற்றிடங்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இந்த முக்கியப் பதவிகளில் நீண்டகாலமாக நிலவும் வெற்றிடங்கள், சபையின் திறமையான மேற்பார்வை, நிர்வாகம் மற்றும் ஒட்டுமொத்த செயற்பாட்டுத் திறனைப் பாதகமாகப் பாதிக்கக்கூடும்.

(இ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிணியினர் தொகுதியில் உதவி பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம் பதவி இடம்பெற்றிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவிக்கு ஓர் உத்தியோகத்தை நியமிக்காமலும், 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் கீழ் தேவையான அங்கீகாரங்களைப் பெறாமலும், அப்பதவியின் செயற்பாடுகள் 2025 பெப்ரவரி 04 முதல் 2025 ஜூலை 04 வரையிலான காலத்திற்கு பணியமர்த்தப்பட்டிருந்தது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், இந்தச் சேவை 2025 பெப்ரவரி 04 முதல் 2025 ஜூலை 04 வரை ஒரு தனியார் நிறுவனத்திற்கு மாதந் தோறும் ரூபா 300,000 கட்டணத்தில் வழங்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடப்பட்டது.

எல்.எஸ்.ஐ. ஐயரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தலைமை கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளின் தற்போதைய நிலை

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

இல.	கணக்காய்வு விசாணை	SLAASMB's பதில்கள்
2	ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை	
2.2.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அதிகாரங்கள் செயற்பாடுகள், மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக குறிப்பிடுவதற்கு.	
அ)	1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் படி, குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் (Specified Business Enterprises -SBEs) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்குவதை கண்காணிப்பதே சபையின் செயற்பாடாக இருக்க வேண்டும். அதன்படி, சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்யும் மொத்தம் 1,702 வணிக நிறுவனங்கள் சபையினால் அடையாளம் காணப்பட்டன. இவற்றில், மேற்கூறிய நோக்கத்திற்காக மீளாய்வாண்டில் வணிக நிறுவனங்களின் 535 நிதிக் கூற்றுக்களின் தொகுப்புகளை மீளாய்வு செய்வதற்கு சபை திட்டமிட்டிருந்தது. இருப்பினும், 472 நிதிக் கூற்றுக்களின் தொகுப்புகள், அல்லது திட்டமிடப்பட்ட நிதிக் கூற்றுக்களின் தொகுப்புகளில் 88 சதவீதம் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் மீளாய்வு செய்யப்படடிருந்தன	ஆண்டுதோறும், சபை, இடர் அடிப்படையிலான, சமவாய்ப்பு மற்றும் சுழற்சி முறையிலான அணுகுமுறையின் பேரில், SLAASMB ஆல் நடத்தப்பட வேண்டிய நிதிக் கூற்றுக்கள மீளய்வுகளின் எண்ணிக்கை மற்றும் கணக்காய்வு ஆய்வுகளின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கிறது. இவை இலக்குகள் நியமங்கள் தொகுப்பு அடிப்படையிலான ஒரு உகந்த நிலை உடன் கிடைக்கக்கூடிய வளங்கள் அதாவது கிடைக்கும்தன்மை பணியாளர்கள். பக்கம் 2025, திட்டமிடும் நேரத்தில் இருந்த பணியாளர்களின் (2 மேற்பார்வை பணியாளர்கள், 3 உதவி மேற்பார்வை பணியாளர்கள் மற்றும் 23 வெளிப்புற மதிப்பாய்வாளர்கள்) அடிப்படையில், SLAASMB 535 நிதிக் கூற்றுக்களத் தொகுப்புகளை மீளாய்வு செய்யத் திட்டமிட்டது. எவ்வாறாயினும், 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உதவிப் பணிப்பாளர் ஒருவரும், ஆண்டின் கடைசி காலாண்டில் பிரதி பணிப்பாளர் நாயகம் ராஜினாமா செய்தனர். 2025 ஆம் ஆண்டின் கடைசி இரண்டு மாதங்களில் SLAASMB இனால் கூடுதலாக 2 பிரதி பணிப்பாளர் நாயகங்களை நியமிக்க முடிந்தபோதிலும், புதிய ஊழியர்களுக்கு மீளாய்வு செயன்முறைக்காகப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியிருந்தது. எனவே, அவர்களின் கற்றல் காலத்தில், அவர்களால் முடிக்க முடிந்த மீளாய்வுகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. இதன் விளைவாக, ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட மீள்பார்வைகளின் எண்ணிக்கையை அடைய முடியவில்லை. இந்தத் தடைகள் இருந்த போதிலும், திட்டமிடப்பட்ட இலக்கில் 88% இனை அடைவது ஏற்றுக்கொள்ளக்கூடியதே.
2.2.4	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், காலவரையறைக்குள்ளும் மற்றும் ஏற்புடைய சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும் குறிப்பிடுவதற்கு.	

தலைமை கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளின் தற்போதைய நிலை

அ)	2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, சபையின் பணிக்கொடைப் பொறுப்பு ரூபா 5,876,043 ஆக இருந்தது. எவ்வாறெனினும், பணிக்கொடை நிதியில் பராமரிக்கப்பட்ட மீதி அந்தப் பொறுப்பை விட ரூபா 4,599,992 ஆல் கூடுதலாக இருந்தது. உண்மையான பணிக்கொடைப் பொறுப்பை விட கணிசமாக அதிகமாக நிதி திரட்டப்பட்டிருப்பதானது, அரசாங்க ஒதுக்கீடுகள் உண்மையான நிதித் தேவைகளுடன் துல்லியமாக சீரமைக்கப்படவில்லை என்பதைக் குறிக்கிறது. இதன் விளைவாக, நிதிகள் பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. சபையானது முதன்மையாக அரசாங்க மானியங்கள் மூலம் நிதியளிக்கப்படும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகச் செயற்படுவதால், பணிக்கொடை நிதியில் அதிகப்படியான இருப்புகளைத் தக்கவைத்துக் கொள்வது, பொது நிதிகளை சிக்கனமாகவும் மற்றும் திறமையாகவும் பயன்படுத்துவது குறித்து கவலைகளை எழுப்புகிறது.	2013 இல் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில், ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய பிறகு பதவி விலகும் ஊழியர்களுக்குப் பணிக்கொடை வழங்குவதற்காக ஒரு தனியான நிதியத்தினை நிறுவ வேண்டும் என சபையினால் முடிவு செய்யப்பட்டது. 2024 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான எங்களின் முன்னைய கணக்காய்வு அறிக்கையில் விளக்கப்பட்டுள்ள படி, பணிக்கொடை கடமைகளை உரிய நேரத்தில் தீர்க்கும் நோக்கத்துடன், மேலதிக நிதி கிடைக்கும் போது மட்டுமே பணிக்கொடை நிதிக்கு பரிமாற்றங்கள் செய்யப்பட்டன. 2021 ஆம் ஆண்டு முதல், திறைசேரியினால் நிதி விடுவிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான நீண்டகால ஊழியர்கள் இராஜினாமா செய்ததன் காரணமாக, இது பணத்தை கொடுப்பனவு செய்யும் போது ஒரு சிக்கலாக மாறியது. அப்போதிருந்து, ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய அனைத்து ஊழியர்களுக்கும் உண்மையான பொறுப்பைக் கணக்கிடுவதன் மூலம், ஒவ்வொரு ஆண்டும் தொடக்கத்தில் பணிக்கொடை நிதியின் போதுமான தன்மையை மதிப்பிடும் ஒரு நடைமுறையை SLAASMB பின்பற்றி வருகிறது. 2024 ஆம் ஆண்டுக்காக நடத்தப்பட்ட மதிப்பீட்டில், ஏறத்தாழ ரூபா 1.8 மில்லியன் பற்றாக்குறை இருப்பது தெரியவந்தது. இதன் காரணமாகவே SLAASMB அந்த நிதியைக் கட்டியெழுப்பியது, இது இறுதியில் அதன்பின்னர் மேலதிக நிதியில் முடிந்தது. இருப்பினும், 2025 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் SLAASMB பணிக்கொடை சேமிப்புக் கணக்கிற்கு எந்த நிதியையும் மாற்றவில்லை. இது தொடர்பாக நாங்கள் திறைசேரியிடம் ஆலோசனை கோரியுள்ளதுடன், அவர்களின் பதிலின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்துள்ளோம்.
3	**மனித வள முகாமைத்துவம்**	
அ)	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சபையின் பதவியணியின் எண்ணிக்கை 33 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து தேவையான அங்கீகாரத்தினைப் பெறாமல் இரண்டாம் நிலையின் கீழ் ஒரு மேலதிக பதவி உருவாக்கப்பட்டிருந்தது	SLAASMB இல் சிறு வணிக நிறுவன நிர்வாகம் ஒரு முக்கியப் பணியாகும். இது, சிறு வணிக நிறுவனங்களிடமிருந்து நிதிக் கூற்றுக்களைப் பெறுவது, நிதித் தகவல்களின் தரவுத்தளத்தை நிர்வகிப்பது, பெறப்பட்ட அறிக்கைகளைக் காப்பகப்படுத்துவது வரையிலான அனைத்து செயல்முறைகளையும் உள்ளடக்கியது. இந்தப் பணி, அவர் இல்லாத சமயங்களில் ஒரே ஒரு உத்தியோகத்தரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. சிறு வணிக நிறுவனங்களிடமிருந்து அதிக எண்ணிக்கையிலான நிதிக் கூற்றுக்கள் பெறப்படுவதால், இந்தப் பணிகளைத் திறமையாகவும் செயற்திறனுடனும் செய்வது மிகவும் கடினமாக இருந்தது. கோப்புப் பராமரிப்பு மற்றும் காப்பகப்படுத்துதலில் சிக்கல்கள் இருந்ததால், இந்தப் பதவியின் அவசியம் பற்றி உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டது. பொது முயற்சிகள் திணைக்களத்தின் 1/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயற்பாட்டு வழிகாட்டல் கையேட்டின் பின்னிணைப்பு அ பட்டியலில் SLAASMB சேர்க்கப்பட்டுள்ளதால், SLAASMB சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் குழுவின் அளவு உட்பட மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் அந்த சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்மூலம், சபையின் செயற்பாடுகளில் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகவும், சுமூகமான செயற்பாட்டிற்கான ஒரு வாரிசுத் திட்டமாகவும், "முகாமைத்துவ உதவியாளர் - அரசுக்குச் சொந்தமான நிறுவன நிர்வாகம்" என்ற புதிய பதவி 2025 ஏப்ரல் 28 ஆந் திகதி உருவாக்கப்பட்டு, அதற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் பெற வேண்டிய தேவை எழவில்லை.

தலைமை கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளின் தற்போதைய நிலை

ஆ)	2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 33 ஆக இருந்த போதிலும், உண்மையான பதவியணியினரின் எண்ணிக்கை 17 ஆக இருந்தது. இதன் விளைவாக 17 வெற்றிடங்களும், 01 மேலதிக பதவியும் உருவாகி இருந்தது. இது ஏறக்குறைய 50 சதவீத வெற்றிடங்கள் இருப்பதைக் குறிக்கிறது. மேலும், பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவி 01, மேற்பார்வை பணிப்பாளர் பதவியில் 02 வெற்றிடங்கள், பிரதி மேற்பார்வை பணிப்பாளர் 6 வெற்றிடங்கள், உதவி மேற்பார்வை பணிப்பாளர் 04 வெற்றிடங்கள், நிதி மற்றும் நிர்வாக உதவி பணிப்பாளர் 01 வெற்றிடம், மற்றும் உதவிப் பணிப்பாளர் - சட்டம் 01 வெற்றிடம் உட்பட பல முக்கிய நிர்வாக மற்றும் செயற்பாட்டுப் பதவிகளில் குறிப்பிடத்தக்க வெற்றிடங்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இந்த முக்கியப் பதவிகளில் நீண்டகாலமாக நிலவும் வெற்றிடங்கள், சபையின் திறமையான மேற்பார்வை, நிர்வாகம் மற்றும் ஒட்டுமொத்த செயற்பாட்டுத் திறனைப் பாதகமாகப் பாதிக்கக்கூடும்.	கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களில் ஆழ்ந்த நிபுணத்துவமும் பணி அனுபவமும் உள்ள தொழில்முறை கணக்காளர்களைக் கொண்டு இந்த வெற்றிடங்கள் அத்தகைய பதவி வெற்றிடங்களில் 12-ஐ மட்டுமே எங்களால் நிரப்ப முடிந்தது . இதேபோன்ற அனுபவம் மற்றும் தகுதி வாய்ந்த ஊழியர்களின் சந்தை சம்பளத் தொகுப்புகளை விட மிகவும் குறைவாக உள்ள குறைந்த சம்பள விகிதங்கள் மற்றும் சலுகைகள் காரணமாக, 2019 ஆம் ஆண்டு முதல் தொழில்துறை ஊழியர்களைத் தக்கவைப்பதும் புதியவர்களைப் பணியமர்த்துவதும் ஒரு தொடர்ச்சியான சவாலாக இருந்து வருகிறது. இந்த விவகாரம் தொடங்கியதிலிருந்தே பல கூட்டங்களில் ஆட்சேர்ப்புச் சிக்கல்கள் ∴ சவால்கள் விவாதிக்கப்பட்டு, 2019 முதல் அமைச்சிற்குத் தெரிவிக்கப்பட்டு வந்தன. இந்த ஆண்டின் கடைசி காலாண்டில், 2025 நவம்பரில் இவ்விடயம் குறித்து தீர்வைக் காணும் நோக்கில் திறைசேரிச் செயலாளருடன் விவாதிக்கப்பட்டது. அது இன்னும் இறுதி செய்யப்படவில்லை, மேலும் கலந்துரையாடல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே, சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைச்சிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் வரை காத்திருக்கவும், அதன் பிறகு அனைத்து வெற்றிடங்களுக்கும் திறமையான, அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பப் பணியாளர்களை ஈர்ப்பதற்கான ஆட்சேர்ப்பு முயற்சிகளைத் தொடங்கவும் சபை முடிவு செய்துள்ளது.
இ)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிணியினர் தொகுதியில் உதவி பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம் பதவி இடம்பெற்றிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவிக்கு ஓர் உத்தியோகத்தை நியமிக்காமலும், 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் கீழ் தேவையான அங்கீகாரங்களைப் பெறாமலும், அப்பதவியின் செயற்பாடுகள் 2025 பெப்ரவரி 04 முதல் 2025 ஜூலை 04 வரையிலான காலத்திற்கு பணியமர்த்தப்பட்டிருந்தது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், இந்தச் சேவை 2025 பெப்ரவரி 04 முதல் 2025 ஜூலை 04 வரை ஒரு தனியார் நிறுவனத்திற்கு மாதந் தோறும் ரூபா 300,000 கட்டணத்தில் வழங்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடப்பட்டது.	குறைந்த பணியாளர் எண்ணிக்கையைக் கொண்ட SLAASMB 2023 இல் நிதி மற்றும் நிர்வாக உதவி பணிப்பாளர் பதவியிலிருந்த அதிகாரி இராஜினாமா செய்ததிலிருந்து, ஆட்சேர்ப்பு செய்வதில் தொடர்ச்சியாகச் சிரமங்களைச் சந்தித்து வருகிறது. கடுமையான ஆட்சேர்ப்பு செயன்முறையின் மூலம் SLAASMB வேட்பாளர்களைப் பணியமர்த்துவதில் வெற்றி பெற்றபோதிலும், அவர்களை நீண்ட காலத்திற்குத் தக்கவைத்துக் கொள்வது கடினமாகவே உள்ளது. (2024 இல், ஒரு ஊழியர் வேறு நிறுவனத்தில் அதிக ஊதியம் பெறும் வாய்ப்பு கிடைத்த மூன்று நாட்களுக்குள் ராஜினாமா செய்தார், மற்றொருவர் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளைத் தேடி ஆறு மாதங்களுக்குள் வெளியேறினார்). நிதி அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள அதிகாரி ஒருவரின் சேவைகளை இரண்டாம் நிலை பணி அடிப்படையில் பெற முடியுமா என்று நாங்கள் அந்த அமைச்சிடமும் விசாரித்துள்ளோம். இந்த நடவடிக்கைகள் பலனளிக்காததால், வேறு வழியின்றி ஒரு தற்காலிக நடவடிக்கையாக, SLAASMB வெளிப்பணி ஒப்பந்தத்தின் மூலம் 2025 ஜூலை வரை நிதி மற்றும் நிர்வாக உதவி பணிப்பாளர் ஒருவரின் சேவைகளைப் பெற்றது. அன்று முதல் இன்று வரை அப்பதவி காலியாக உள்ளது.

நிதி நிலைமைக் கூற்று

அன்று உள்ளவாறு	குறிப்பு	25 டிசம்.31 ரூபா	24 டிசம்.31 ரூபா மீள்குறிப்பிடப்பட்டுள்ளது
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனங்கள்,பொறி மற்றும் உபகரணங்கள்	3	**19,908,758**	23,007,860
புலனாகாத சொத்துக்கள்	4	**30,480,520**	34,270,560
வைப்புத் தொகை	5	**6,979,735**	6,979,735
நிர்ணயி. நலன் சொத்துக்கள்	6	**4,599,992**	9,159,049
		61,969,005	73,417,204
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	7	**512,190**	538,840
பெறவேண்டிய கணக்குகள்	8	**3,208,200**	3,926,146
காசு மற்றும் காசுக்கு சமமானவை	9	**3,830,669**	1,804,772
		7,551,059	6,269,758
மொத்த சொத்துக்கள்		**69,520,064**	79,686,962
பொறுப்புக்கள்			
நடைமுறையல்லா பொறுப்புக்கள்			
பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியம்	10	**61,969,005**	73,417,204
		61,969,005	73,417,204
நடைமுறை பொறுப்புகள்			
பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியம்	11	**3,498,309**	1,242,873
செலுத்த வேண்டிய கணக்குகள்	12	**4,052,750**	5,026,885
		7,551,059	6,269,758
மொத்தப் பொறுப்புகள்		**69,520,064**	79,686,962

பக்கம் 6 முதல் 12 வரை உள்ள குறிப்புக்கள் நிதிநிலை கூற்றுக்களை நிறைவுபடுத்துவதற்கான முக்கியமானதொரு பகுதியாகும்.

இந்நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கும், சமர்பிப்பதற்கும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையின் சபை உறுப்பினர்கள் பொறுப்புடையவராவர்கள்.

இந்நிதிக் கூற்றுக்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு சபை சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது

தலைவர்
கே.எம.ஏ.என். தவுலகல

உறுப்பினர்
எஸ்.எம்.எஸ். பண்டார

பணிப்பாளர் நாயகம்
எஸ். ஹல்லொலுவ

பிரதி பணிப்பாளர் நாயகம்
ஏ. முபாரக்

திகதி: 29 சனவரி 2026

நிதி செயலாற்றல் கூற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றும்

டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	25 டிசம். 31 ரூபா	24 டிசம். 31 ரூபா மீள்குறிப்பிடப்பட்டுள்ளது
வருவாய்			
அரச மானியங்கள்	13	**102,388,322**	103,038,617
கழி: இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்திற்கு விடுவிக்கப்பட்ட மானியங்கள்		**2,000,000**	2,000,000
		100,388,322	101,038,617
தொழிற்பாட்டுச் செலவினங்கள்			
சபை உறுப்பினர் படி		**(1,545,080)**	(1,480,474)
கணக்காய்வாளர் ஊதியம்	14	**(373,996)**	(400,000)
பதவியணியினர் கிரயம்	15	**(50,429,069)**	(53,418,460)
எரிபொருளும் உராய்வு நீக்கீகளும்		**(143,204)**	(127,550)
பத்திரிகை அறிவித்தல்கள்		**(1,682,109)**	(570,789)
வாடகையும் கட்டிட சேவை கட்டணங்களும்		**(17,673,893)**	(16,858,862)
பெறுமானத்தேய்வும் காலக்கழிவு செலவினங்களும்	3 & 4	**(8,558,468)**	(8,682,590)
மின்சாரம்		**(1,548,720)**	(1,974,714)
மீளாய்வாளர்களுக்கான தொழிலசார் கட்டணம்		**(1,265,250)**	(584,000)
சர்வதேச உறுப்புரிமை		**(3,121,350)**	(2,868,450)
புத்தகங்களும் சஞ்சிகைகளும்		**(1,264,914)**	(749,455)
பயிற்சி மற்றும் மேம்பாடு		**(525,950)**	(638,292)
அனுமதிபத்திரமும் காப்புறுதியும்		**(1,164,331)**	(1,087,126)
காகிதாதி மற்றும் எழுதுகருவிகள்		**(662,526)**	(656,525)
எம்ஐஎஸ் க்கான ஆதரவும் பராமரிப்பும்		**(1,958,800)**	(1,632,333)
இதர நிர்வாக செலவினம்	16	**(8,470,662)**	(9,308,997)
		(100,388,322)	(101,038,617)
ஏனைய விரிவான வருமானம்			
நிர்ணயிக்கப்பட்ட நன்மை கடப்பாடுகளின் மீள்அளவீடு மீதான இலாபம் / (நட்டம்)		**(4,079,441)**	(1,666,589)
நிர்ணயிக்கப்பட்ட நன்மை கடப்பாடுகளின் மீள்அளவீடு தொடர்பான அரச மானியங்கள்		**4,079,441**	1,666,589
		-	-
ஆண்டின்போதான தேறிய மிகை / (குறைவு)		-	-

பக்கம் 6 முதல் 12 வரை உள்ள குறிப்புக்கள் நிதிநிலை கூற்றுக்களை நிறைவுபடுத்துவதற்கான முக்கியமானதொரு பகுதியாகும்.

தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கூற்று

	திரண்ட நிதி ரூபா
2023 டிசம்பர 31 உள்ளவாறு இருப்பு	-
ஆண்டுக்கான தேறிய மிகை / பற்றாக்குறை	-
2024 டிசம்பர 31 உள்ளவாறு இருப்பு	-
ஆண்டுக்கான தேறிய மிகை / பற்றாக்குறை	-
2025 டிசம்பர 31 உள்ளவாறு இருப்பு	-

பக்கம் 6 முதல் 12 வரை உள்ள குறிப்புக்கள் நிதிநிலை கூற்றுக்களை நிறைவுபடுத்துவதற்கான முக்கியமானதொரு பகுதியாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	25 டிசம்.31 ரூபா	24 டிசம்.31 ரூபா மீள்குறிப்பிடப்பட்டுள்ளது
தொழில்பாடு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்			
ஆண்டின்போதான தேறிய மிகை / (குறைவு)		-	-
சீராக்கங்கள்;			
ஆண்டின் போது பெறப்பட்ட அரச மானியங்கள்		97,275,000	101,232,887
பிற்போடப்பட்ட அரச மானியங்கள் மொத்த விரிவான வருமானத்திற்கு மாற்றப்பட்டது	13	(106,467,763)	(106,307,206)
தேய்மானம் மற்றும் கடன்தீர்ப்பு	3 & 4	8,558,468	8,682,590
பணிக்கொடை முதலீடு மீதன வட்டி		(732,180)	(928,215)
நிர்ணயிக்கப்பட்ட லன்(சொத்து)/கடப்பாடு	15.1	4,559,057	2,274,788
செலவிலும் கூடிய வருமானம்/(வருமானத்திலும் கூடிய செலவினம்			
தொழிற்படு மூலதனத்திற்கு முன்பு ஏற்பட்ட மாற்றங்கள்		3,192,582	4,954,844
இருப்புக்களில் ஏற்பட்ட (அதிகரிப்பு)/குறைவு		26,649	189,239
பெறவேண்டிய கணக்குகளில (அதிகரிப்பு)/குறைவு		717,946	(789,679)
செலுத்த வேண்டிய கணக்குகளில் அதிகரிப்பு/குறைவு).		(974,134)	3,153,456
தொழில்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்		2,963,043	7,507,860
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்			
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு		(1,669,326)	(2,278,825)
மென்பொருள் விருத்திக்கான கொடுப்பனவு		-	(2,579,900)
பணிக்கொடை நிதியத்தில் முதலீடு		-	(5,100,000)
பணிக்கொடை நிதியம் /பாதுகாப்பு அறையில் முதலீடு செய்ததில் பெறப்பட்ட வட்டி		732,180	928,215
தொழில்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்		(937,146)	(9,030,510)
நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		-	-
காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)		2,025,897	(1,522,650)
வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்		1,804,772	3,327,422
வருட முடிவில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	9	3,830,669	1,804,772

பக்கம் 6 முதல் 12 வரை உள்ள குறிப்புக்கள் நிதிநிலை கூற்றுக்களை நிறைவுபடுத்துவதற்கான முக்கியமானதொரு பகுதியாகும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. நிறுவனத் தகவல்

2025 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் நியமங்கள் கண்காணிப்புச் சபையின் நிதிநிலை அறிக்கைகள், 2026 சனவரி 29 அன்று சபையின் உறுப்பினர்களின் தீர்மானத்தின் மூலம் வெளியிடுவதற்கு அதிகாரப்பூர்பமாக வழங்கப்பட்டன. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் நியமங்கள் கண்காணிப்புச் சபை என்பது, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் நியமங்கள் சட்டத்தின் படி நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ சபையாகும்.

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் நியமங்கள் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க, குறிப்பிட்ட வணிக நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வு செய்தல் ஆகியவற்றில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வுத் நியமங்களுக்கு இணங்குவதைக் கண்காணிப்பதே இவ்வாண்டு சபையின் பணியாகும்.

2025 திசெம்பர் 31 ஆந் திகதி அன்றுள்ளவாறு சபையில் 16 நிரந்தர ஊழியர்களும் 1 ஒப்பந்த ஊழியரும் பணிபுரிந்தனர் (2024 டிசம்பர் 31 ஆந் திகதி அன்றுள்ளவாறு 14 நிரந்தர ஊழியர்களும் 1 ஒப்பந்த ஊழியரும்).

2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் தயாரிப்பின் அடிப்படை

சபையின் நிதிநிலை அறிக்கைகள், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தரநிலைகளின்படி திரள் கணக்கீட்டு முறையில், வரலாற்றுச் செலவு மரபின் கீழ் தயாரிக்கப்படுகின்றன.

நிதி அறிக்கைகள், நிறுவனம் தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன, மேலும் கணக்கீட்டு கொள்கைகள் இந்தக் காலகட்டம் முழுவதும் சீராகப் பின்பற்றப்பட்டுள்ளன.

அறிக்கை திகதிக்குப் பிறகான நிகழ்வுகள்

நிதி நிலை அறிக்கையின் திகதிக்குப் பிறகான அனைத்து முக்கிய நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு, தேவைப்படும் இடங்களில் நிதி அறிக்கைகளில் பொருத்தமான சரிசெய்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றன.

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவை, திரட்டப்பட்ட தேய்மானத்தைக் கழித்த அடக்க விலையில் குறிப்பிடப்படுகின்றன. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது, பின்வருமாறு நேர்கோட்டு முறையில் நிதிச் செயற்திறன் அறிக்கையில் தேய்மானம் பற்று வைக்கப்படுகிறது.

விபரம்	மதிப்பிடப்பட்ட பயன்பாடு
மோட்டார் வாகனங்கள்	15 வருடங்கள்
அலுவலக உபகரணங்கள்	4 - 25 வருடங்கள்
தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் இணைப்புகள்	6 - 30 வருடங்கள்
6 - 30 வருடங்கள்	3 வருடங்கள்

பயன்படுத்தப்பட்ட காலத்தின் அடிப்படையில், வாங்கிய ஆண்டிலும் விற்ற ஆண்டிலும் தேய்மானம் கணக்கிடப்படுகிறது. அதன்படி, வாங்கிய மாதத்தில் முழுத் தேய்மானமும், விற்ற மாதத்தில் தேய்மானமும் கணக்கிடப்படுவதில்லை.

ரூபா 25,000/- இனை விஞ்சாத விலையில் வாங்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தவிர்ந்த அனைத்து கணக்கீட்டு தரநிலைகள் மற்றும் கணக்காய்வுத் தரநிலைகள் மற்றும் ரூ. 10,000/- இனை விஞ்சாத விலையில் வாங்கப்பட்ட இதர வெளியீடுகள் தவிர மற்ற பொருட்கள், அவை வாங்கப்பட்ட ஆண்டிலேயே செலவினமாகப் பதியப்படும்.

அருவ சொத்துக்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தரநிலைகள் SLPSAS 20 அருவச் சொத்துக்களின் படி, ஒரு நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் பொருளாதாரப் பலன்கள் கிடைப்பது சாத்தியமாகவும், அந்தச் சொத்தின் மதிப்பை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமெனவும் இருந்தால், ஒரு அருவச் சொத்து அங்கீகரிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் கொண்ட அருவச் சொத்துக்கள், அவற்றின் அடக்க விலையிலிருந்து திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் திரட்டப்பட்ட மதிப்பிழப்பு இழப்புகளைக் கழித்த பிறகு கணக்கிடப்படுகின்றன.

சொத்துக்களாகக் கருதப்படும் மென்பொருள் உருவாக்கச் செலவுகள், 10 ஆண்டுகளை விஞ்சாத அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்திற்குள் தேய்மானம் செய்யப்படுகின்றன.

சரக்குகள்

சரக்கு இருப்புகள், அடக்க விலை மற்றும் நிகர விற்பனை மதிப்பு ஆகியவற்றில் எது குறைவோ அந்த மதிப்பில் மதிப்பிடப்படுகின்றன. சரக்கு இருப்புகளின் அடக்க விலையானது, முதலில் வருவது முதலில் வெளியேறுவது (FIFO) என்ற அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

பெறத்தக்க கணக்குகள்

பெற வேண்டிய கணக்குகள், வசூலிக்கப்படவிருக்கும் என மதிப்பிடப்பட்ட தொகைகளில் குறிப்பிடப்படுகின்றன, மேலும் தேவைப்படும் இடங்களில், வாராக்கடன்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான கடன்களுக்காக நிதிநிலை அறிக்கைகளில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

காசு மற்றும் காசிற்கு இணையானவை

கையிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள காசு மற்றும் குறுகிய கால வைப்புத் தொகைகள் ஆகியவை அடக்க விலையில் கணக்கிடப்படுகின்றன.

பணப்புழக்க அறிக்கையின் நோக்கத்திற்காக, காசி மற்றும் காசுக்கு இணையானவை என்பவை, நிலுவையிலுள்ள வங்கி மேலிருப்புகளைக் கழித்த பிறகு, கையிருப்பு காசு மற்றும் வங்கிகளிலுள்ள வைப்புத்தொகைகளை உள்ளடக்கியவை ஆகும்.

செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய கணக்குகளுக்கான பொறுப்புகள், செலுத்த என எதிர்பார்க்கப்படும் காசு மற்றும் காசிற்கு இணையானவற்றின் தொகைக்குக் கணக்கிடப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

வரையறுக்கப்பட்ட பலன் செலவுகள்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய, ஓய்வூதியப் பணிக்கொடைகளை நிறுத்துவதற்கான வரையறுக்கப்பட்ட பலன் கடப்பாடு, நிதிக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டு, அந்த வரையறுக்கப்பட்ட பலன் கடப்பாட்டின் தற்போதைய மதிப்பைக் குறிக்கிறது. அனைத்து காப்பீட்டு கணிப்பு ஆதாயங்களும் இழப்புகளும் நிதிச் செயல்திறன் மற்றும் இதர விரிவான வருமான அறிக்கையில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

அரசாங்க மானியங்கள்

இலங்கை அரசாங்கத்தின் பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்படும் மானியங்கள், அது தொடர்பான செலவுகள் அங்கீகரிக்கப்படும் காலக்கட்டத்தில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்காலங்களில் செலவினமாகக் கணக்கிடப்படும் சொத்துக்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் அரசாங்க மானியங்கள், ஒத்திவைக்கப்பட்ட வருமானமாகக் கருதப்படுகின்றன. பணம் மற்றும் பணத்திற்கு இணையானவை உள்ளிட்ட பிற சொத்துக்களால் குறிப்பிடப்படும் அரசாங்க மானியங்களிலிருந்து, (பெறப்பட்ட மானியங்கள் காரணமாக ஏற்படும் பொறுப்புகளைத் தவிர) மற்ற பொறுப்புகளைக் கழித்த பிறகு கிடைக்கும் தொகையானது, பொறுப்புகளாகக் கருதப்படுகிறது.

முன்னைய காலப் பிழைகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தரநிலைகள் SLPSAS 3 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றம் மற்றும் பிழைகள் ஆகியவற்றின்படி நிதிக் கூற்று அறிக்கைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்களின் கீழ் சொத்துக்களாக அங்கீகரிக்கப்பட்ட மென்பொருள் உருவாக்கச் செலவுகள், கவனக்குறைவாக 10 ஆண்டுகளுக்குப் பதிலாக 5 ஆண்டுகளுக்கு மட்டுமே தேய்மானம் செய்யப்பட்டதால், முந்தைய காலத்திற்கான சரிசெய்தல்களுக்கு உட்படுத்தப்பட்டன.

"ஒத்திவைக்கப்பட்ட வருமானம்" அரசாங்க மானியங்கள் என அங்கீகரிக்கப்பட்ட தொகையானது, அரசாங்க மானியங்களைப் பயன்படுத்திப் பெறப்பட்ட சொத்துக்களை (பொறுப்புகளைக் கழித்து) குறிக்கிறது. முந்தைய காலப் பிழைகள் தொடர்பான சரிசெய்தலின் விளைவாக, அருவச் சொத்துக்களாக அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் அதிகரித்தபோது, தொடர்புடைய சொத்தின் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட அரசாங்க மானியங்களும் அதே அளவு அதிகரித்தன. இதனால், "ஒத்திவைக்கப்பட்ட வருமானம்" அரசாங்க மானியங்கள் என அங்கீகரிக்கப்பட்ட தொகையும் அதிகரித்தது.

மேற்கூறிய சரிசெய்தலின் காரணமாக, முந்தைய பயனுள்ள ஆயுட்காலங்களைப் பயன்படுத்திப் பதிவு செய்யப்பட்ட தேய்மானத் தொகை ரூபா 3,629,840/- ஆகக் குறைந்தது. இந்தக் குறைவின் காரணமாக, அந்த ஆண்டுக்கான செலவினங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அரசாங்க மானியம் அதே அளவு அதிகரித்தது.

மேற்கண்ட மாற்றங்களின் காரணமாக நிகர இயக்கப் பணப்புழக்கத்தில் எந்த மாற்றங்களும் இல்லை.

நிதிக் கூற்று அறிக்கைகளிலுள்ள ஒப்பீட்டுத் தகவல்கள் பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

	நிதிக் கூற்று அறிக்கை		நிதிச் செயல்திறன் அறிக்கை	
	அருவச் சொத்துக்கள்	ஒத்திவைக்கப்பட்ட வருமானம் / அரசு மானியங்கள் (நடப்புக்காலம் அல்லாதவை)	தேய்மானச் செலவு 2024	அரசு மானியங்கள்
குறிப்பு உசாத்துணை	குறிப்பு 4	குறிப்பு 10	குறிப்பு 4	குறிப்பு 13
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
முன்னர் அறிவிக்கப்பட்டது	30,640,720	69,787,364	7,259,680	106,668,457
2024 ஆம் ஆண்டுக்கான தேய்மானச் செலவில் பிழைகளின் தாக்கம்	3,629,840	3,629,840	(3,629,840)	(3,629,840)
31.12.2024 அன்றுள்ளவாறு திருத்தப்பட்ட இருப்பு	34,270,560	73,417,204	3,629,840	103,038,617

3. ஆதனங்கள் பொறிகள் மற்றம் உபகரணங்கள்

	மோட்டார் வாகனங்கள்		அலுவலக உபகரணம்		தளபாடமும் பொருத்திகளும்		நூலக புத்தகங்கள்		நூலக புத்தகங்கள்		மொத்தம்	
உள்ளவாறு	**25 டிசம்.31**	24 டிசம்.31	**25 டிசம்.31**	24 டிசம்.31	**25 டிசம்.31**	24 டிசம்.31	**25 டிசம்.31**	24 டிசம்.31	**25 டிசம்.31**	24 டிசம்.31	**25 டிசம்.31**	24 டிசம்.31
	ரூபா	ரூபா	**ரூபா**	ரூபா	**ரூபா**	ரூபா	**ரூபா**	ரூபா	**ரூபா**	ரூபா	**ரூபா**	ரூபா
கிரயம்												
ஆண்டின் ஆரம்பத்தில்	**51,160,000**	51,160,000	**15,766,463**	14,168,643	**13,389,043**	12,710,538	**3,227,099**	3,224,599	**1,641,054**	1,641,054	**85,183,659**	82,904,834
சேர்ப்பனவு	**-**	-	**1,380,332**	1,597,820	**283,794**	678,505	**5,200**	2,500	**-**	-	**1,669,326**	2,278,825
ஆண்டின் இறுதியில்	**51,160,000**	51,160,000	**17,146,795**	15,766,463	**13,672,837**	13,389,043	**3,232,299**	3,227,099	**1,641,054**	1,641,054	**86,852,985**	85,183,659
ஆண்டின் தேய்மானம்												
ஆண்டின் இறுதியில்	**34,921,334**	31,510,667	**12,270,042**	10,928,025	**11,760,046**	11,461,562	**3,224,377**	3,222,795	**-**	-	**62,175,799**	57,123,049
குறைத்தெழுதிய பெறுமதி	**3,410,666**	3,410,667	**947,603**	1,342,017	**408,815**	298,484	**1,344**	1,582	**-**	-	**4,768,428**	5,052,750
ஆண்டின் இறுதியல்	**38,332,000**	34,921,334	**13,217,645**	12,270,042	**12,168,861**	11,760,046	**3,225,721**	3,224,377	**-**	-	**66,944,227**	62,175,799
குறைத்தெழுதிய பெறுமதி ஆண்டின் இறுதியல்	**12,828,000**	16,238,666	**3,929,150**	3,496,421	**1,503,976**	1,628,997	**6,578**	2,722	**1,641,054**	1,641,054	**19,908,758**	23,007,860

3.1 நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதனப் பணிகளில், 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அலுவலக வளாகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கட்டுமானப் பணிகளுக்காக ஆலோசகருக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்களும் அடங்கும். அரசாங்கம் மூலதனச் செலவினங்களைக் குறைத்ததன் காரணமாக இத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது, மேலும் இது 2026 ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

	டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	25 டிசம்.31 ரூபா	24 டிசம்.31 ரூபா மீள்குறிப்பிடப்பட்டுள்ளது
4	**அருவச் சொத்துக்கள்** (மென்பொருள் விருத்தி)		
	செலவினம்		
	ஆண்டின் ஆரம்பத்திலுள்ள மீதி	**37,900,400**	33,718,500
	ஆண்டின் போதான செலவினம்	**-**	4,181,900
	ஆண்டின் இறுதியிலுள்ள மீதி	**37,900,400**	37,900,400
	திரட்டப்பட்ட கடன்தீர்ப்பனவு		
	ஆண்டின் தொடக்கத்தில் இருப்பு	**3,629,840**	-
	ஆண்டின் போது கடன்தீர்ப்பனவு	**3,790,040**	3,629,840
	ஆண்டின் இறுதியில் இருப்பு	**7,419,880**	3,629,840
	எழுதப்பட்ட மதிப்பு	**30,480,520**	34,270,560
5	**வைப்புக்கள்** (நடைமுறையல்லா)		
	வாடகை வைப்பு	**6,879,735**	6,879,735
	வைப்புக்கள் பாதுகாப்பு காப்பறை	**100,000**	100,000
		6,979,735	6,979,735
6	**நிர்ணயிக்கப்பட்ட நலன் (சொத்து)/ கடமைகள்**		
	ஆண்டின் தொடக்கத்தில் இருப்பு	**9,761,906**	8,086,803
	ஆண்டுக்கான கட்டணம்	**819,437**	670,620
	ஆண்டுக்கான வட்டி	**392,359**	865,794
	ஆண்டுக்கான நடப்பு (ஆதாயங்கள்)/இழப்புகள்	**4,079,441**	1,666,589
		15,053,143	11,289,806
	ஆண்டின் போது செலுத்தப்பட்ட தொகை	**(9,177,100)**	(1,527,900)
		5,876,043	9,761,906
	பணிக்கொடை நிதியம் (குறிப்பு 6.1)	**(10,476,035)**	(18,920,955)
	ஆண்டின் இறுதியில் இருப்பு	**(4,599,992)**	(9,159,049)
	கடப்பாட்டின் தற்போதைய மதிப்பு பின்வரும் அனுமானங்களைப் பயன்படுத்தி அளவிடப்பட்டது.		
	எதிர்பார்க்கப்படும் சம்பள உயர்வு	**2%**	2%
	கழிவீடு/வட்டி விகிதம்	**10.0%**	11.5%
	பணியாளர் வருவாய் காரணி	**9%**	9%
	பணிக்கொடைக்கான பொறுப்பு பகுதியளவில் நிதியளிக்கப்படுகிறது		
6.1	**பணிக்கொடை நிதி**		
	ஆண்டின் தொடக்கத்தில் இருப்பு	**18,920,955**	14,420,640
	ஆண்டின் போது செய்யப்பட்ட முதலீடுகள்	**-**	5,100,000
	ஆண்டின் போது பெறப்பட்ட வட்டி	**732,180**	928,215
	ஆண்டின் போது பணம் செலுத்துதல்	**(9,177,100)**	(1,527,900)
	ஆண்டின் இறுதியில் இருப்பு	**10,476,035**	18,920,955
7	**இருப்புக்கள்**		
	காகிதாதிகள்	**512,190**	538,840

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது		25 டிசம்.31 ரூபா	24 டிசம்.31 ரூபா மீள்குறிப்பிடப்பட்டுள்ளது
8	**பெறவேண்டிய கணக்குகள்**		
	ஆலோசகருக்கு பகுதி கட்டணம் செலுத்தப்பட்டது	**3,203,200**	3,921,146
	வைப்புத்தொகை	**5,000**	5,000
		3,208,200	3,926,146
9	**காசும் காசுக்கு சமமானவைகளும்**		
	கையிலும் வங்கியிலும் உள்ள காசு	**3,830,669**	1,804,772
		3,830,669	1,804,772
10	**ஒத்திவைக்கப்பட்ட வருமானம் - அரசு மானியங்கள்** (நடைமுறையல்லாதவை)		
	ஆண்டின் தொடக்கத்தில் இருப்பு	**73,417,204**	72,813,857
	முந்தைய காலப் பிழையைத் திருத்துதல்		
	முந்தைய ஆண்டு தொடக்க இருப்புக்கு சரிசெய்தல்	**-**	-
		73,417,204	72,813,857
	நடைமுறையல்லா சொத்துக்களைப் பெறுவதற்குப் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்ட மானியங்கள்	**1,669,326**	6,460,725
	கணக்குகளிலிருந்து மாற்றப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களைப் பெறுவதற்குப்		
	பெறப்பட்டு பயன்படுத்தப்பட்ட மானியங்கள்	**-**	5,100,000
	ஆண்டுக்கான தேய்மானம் மற்றும் கடன் தீர்க்கும் செலவுகள்	**(8,558,468)**	(8,682,590)
	பணிக்கொடை நிதியில் பெறப்பட்ட வட்டி	**732,180**	928,215
	அலுவலக உபகரணங்களை அகற்றுவதில் இழப்பு	**-**	-
	ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டு கட்டணம்	**(5,291,237)**	(3,203,003)
	ஆண்டின் இறுதியில் இருப்பு	**61,969,005**	73,417,204
	பிரதிநிதித்துவப்படுத்துபவை:		
	சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள்	**19,908,758**	23,007,860
	அருவ சொத்துக்கள்	**30,480,520**	34,270,560
	வைப்புத்தொகை (நடப்பு அல்லாதது)	**6,979,735**	6,979,735
	(பணிக்கொடைக்கான ஒதுக்கீடு)/பணிக்கொடை நிதியின் அதிகப்படியான தொகை	**4,599,992**	9,159,049
	ஆண்டின் இறுதியில் இருப்பு	**61,969,005**	73,417,204
11	**ஒத்திவைக்கப்பட்ட வருமானம் - அரசு மானியங்கள்** (நடைமுறை)		
	ஆண்டின் தொடக்கத்தில் இருப்பு	**1,242,873**	5,318,539
	(அதிகரிப்பு)/சரக்குகள் மற்றும் பெறத்தக்க கணக்குகளில் குறைவு	**(744,596)**	600,440
	காசு மற்றும் காசு சமமானவற்றில் அதிகரிப்பு/(குறைவு)	**2,025,897**	(1,522,650)
	செலுத்த வேண்டிய கணக்குகளில் அதிகரிப்பு/(குறைவு)	**974,135**	(3,153,456)
	ஆண்டின் இறுதியில் இருப்பு	**3,498,309**	1,242,873
	பிரதிநிதித்துவப்படுத்துபவை		
	இருப்புக்கள்	**512,190**	538,840
	பெறவேண்டிய கணக்குகள்	**3,208,200**	3,926,146
	காசும் காசுக்கு சமமானவைகளும்	**3,830,669**	1,804,772
	கழி. செலுத்த வேண்டிய கணக்குகள்	**(4,052,750)**	(5,026,885)
	ஆண்டின் இறுதியில் மீதி	**3,498,309**	1,242,873

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	25 டிசம்.31 ரூபா	24 டிசம்.31 ரூபா மீள்குறிப்பிடப்பட்டுள்ளது
12 செலுத்த வேண்டிய கணக்குகள்		
கணக்காய்வாளர்களின் ஊதியம்	800,000	700,000
செலுத்த வேண்டிய ஊ.சே.நிதி	-	976,265
செலுத்த வேண்டிய ஊ.ந.நிதி	-	146,440
எம்.ஐ.எஸ் நிறைவுற்றதற்கான ஆலோசனைக் கட்டணம்	-	1,602,000
மீளாய்வாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொழில்முறை கட்டணங்கள	-	400,000
செலுத்த வேண்டிய பணியாளர் ஊக்கத்தொகை	68,500	39,000
செலுத்த வேண்டிய அகக்கணக்காய்வு கட்டணம்	500,000	260,000
செலுத்த வேண்டிய ஆண்டு அறிக்கை செலவுகள்	400,000	400,000
செலுத்த வேண்டிய பயன்பாட்டுச் செலவுகள்	138,000	245,421
செலுத்த வேண்டிய வெளிப்புற சேவைகள்	84,750	107,940
இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியது	2,000,000	-
செலுத்த வேண்டிய ஆண்டு அறிக்கை செலவுகள்	61,500	149,819
	4,052,750	5,026,885

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	25 டிசம்.31 ரூபா	24 டிசம்.31 ரூபா மீள்குறிப்பிடப்பட்டுள்ளது
13 அரசு மானியங்கள்		
ஆண்டில் பெறப்பட்ட அரச மானியங்கள்	97,275,000	101,232,887
பணிக்கொடை நிதியில் பெறப்பட்ட மற்றும் முதலீடு செய்யப்பட்ட மானியங்கள்	-	(5,100,000)
மூலதனச் செலவினங்களுக்குப் பயன்படுத்தப்படும் மானியங்கள்	(1,669,326)	(6,460,725)
நிகர நடப்பு சொத்துக்களுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்படும் மானியங்கள்	(2,255,436)	4,075,666
ஆண்டிற்கான தேய்மானம் மற்றும் கடன்தொகை செலவுகள	8,558,468	8,682,590
பணிக்கொடை நிதியில் பெறப்பட்ட வட்டி	(732,180)	(928,215)
ஆண்டிற்கான வரையசெய்யப்பட்ட நன்மை பொறுப்பு	1,211,796	1,536,414
நிதி செயலாற்றுகை அறிக்கையில் காட்டப்பட்டுள்ள மானியங்கள்	102,388,322	103,038,617
பிற விரிவான வருமானத்தில் காட்டப்பட்டுள்ள வரையறைசெய்யப்பட்ட நன்மை பொறுப்பின் மறுமதிப்பீடு தொடர்பான மானியம்	4,079,441	1,666,589
ஆண்டில் செலுத்த வேண்டிய மானியங்களாகப் பயன்படுத்தப்பட வேண்டிய மானியங்கள்	-	1,602,000
காசுப்பாய்ச்சல் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள மொத்த விரிவான வருமானத்திற்கு மாற்றப்பட்ட மொத்த மானியங்கள்	106,467,763	106,307,206

14 கணக்காய்வாளர்களின் ஊதியம்		
நடப்பு ஆண்டு	400,000	400,000
முந்தைய ஆண்டுகளில் (அதிக)/குறைவான ஒதக்கீடுகளின் கீழ்	(26,004)	
	373,996	400,000

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது		25 டிசம்.31 ரூபா	24 டிசம்.31 ரூபா மீள்குறிப்பிடப்பட்டுள்ளது
15	**பணியாளர்கள் செலவுகள்**		
	பணியாளர்களின் ஊதியம்	**38,407,527**	41,248,188
	ஊழியர் சேமலாப நிதியம்	**4,082,160**	4,447,533
	ஊழியர்களின் நம்பிக்கை நிதியம்	**1,020,540**	1,111,883
	நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடு (குறிப்பு 15.1)	**479,616**	608,199
	பிற வெளிமூல சேவைகள்	**2,619,902**	1,991,945
	பணியாளர்கள் ஊக்கத் தொகை	**615,058**	544,882
	ஊழியர்களின் மருத்துவ காப்புறுதி	**1,481,243**	1,543,084
	ஊழியர் நலன்புரி	**1,206,798**	1,170,193
	ஏனைய ஊழியர் நலன்புரி	**516,225**	752,553
		50,429,069	53,418,460
15.1	**நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடு**		
	ஆண்டிற்கான கட்டணம்	**819,437**	670,620
	ஆண்டுக்கான தேறிய வட்டி	**(339,821)**	(62,421)
		479,616	608,199
	ஏனைய விரிவான வருமானமாக வெளிப்படுத்தப்பட்ட உண்மையான இலாபங்கள்/நட்டங்கள்	**4,079,441**	1,666,589
	காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள மொத்த நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடு	**4,559,057**	2,274,788
16	**ஏனைய நிர்வாக செலவினம்**		
	கணினி பராமரிப்பு	**962,784**	899,022
	உபகரணங்கள் பராமரிப்பு	**1,030,125**	1,395,106
	வாகன பராமரிப்பு	**1,787,707**	2,145,616
	தொடர்பாடல் செலவுகள்	**1,603,774**	1,723,140
	வாகன நிறுத்தற் செலவுகள்	**661,095**	528,082
	தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் காப்புறுதி	**191,972**	202,402
	வங்கி கட்டணங்கள்	**100,855**	85,708
	பயண செலவுகள்	**172,551**	125,490
	அலுவலக செலவுகள்	**1,050,605**	842,294
	ஆண்டறிக்கை	**351,998**	329,788
	சட்ட மற்றும் தொழில்முறை கட்டணம்	**-**	516,148
	அகக்கணக்காய்வுக் கட்டணம்	**557,196**	516,201
		8,470,662	9,308,997

17. மூலதன உறுதிப்பாடுகள்

17.1. 2019 இல் திட்டம் தொடங்கப்பட்ட போதிலும், நிதிப் பற்றாக்குறை காரணமாக கட்டுமானப் பணிகள் நடைபெறாததால், அலுவலக இடத்தினுள் வடிவமைப்பு மற்றும் பிரிப்புப் பணிகளை இரண்டு கட்டங்களாக மீண்டும் தொடங்க சபை ஒப்புதல் அளித்துள்ளது. தற்போதைய விலைகளின் அடிப்படையில் இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 3 மில்லியன் (வரிகள் நீங்கலாக) ஆகும்.

17.2. ஒரு மோட்டார் வாகனத்தைப் பழுதுபார்ப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிகச் மூலதனச் செலவினம் ரூ. 2.7 மில்லியனாக இருந்தது.

18. தொடர்புடைய தரப்பு பரிவர்த்தனைகள்

2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டில் தொடர்புடைய தரப்பு பரிவர்த்தனைகள் எதுவும் நடைபெறவில்லை.

19. நிபந்தனைக்குட்பட்ட பொறுப்புகள்

31 டிசம்பர் 2025 அன்றுள்ளவாறு நிபந்தனைக்குட்பட்ட பொறுப்புகள் எதுவும் இருக்கவில்லை. (2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு - ஏதுமில்லை).

20. நிதிக் கூற்று அறிக்கையின் திகதிக்குப் பிறகான நிகழ்வுகள்

அறிக்கை திகதிக்குப் பிறகு, நிதிக் கூற்று அறிக்கைகளில் ஏதேனும் சரிசெய்தல்களையோ அல்லது வெளிப்படுத்தல்களையோ அவசியமாக்கும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை.

பின்னிணைப்புகள்

குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள்

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் நியமங்கள் சட்டமானது, பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பின்வரும் வணிக நிறுவனங்களைக் குறிப்பிட்ட வணிக நிறுவனங்களாக அடையாளம் கண்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்குவதை கண்காணிப்புச் சபையானது கண்காணிக்க ஏதுவாக, கீழ்க்காணும் குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் தங்களின் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு நிதிக் கூற்று அறிக்கைகளை SLAASMB-க்குச் சமர்ப்பிக்க வேண்டும் என இச்சட்டம் கோருகிறது.

- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற நிறுவனங்கள்.
- 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் சட்டத்தின் கீழ் காப்புறுதி வணிகத்தை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்.
- குத்தகை வணிகம் செய்யும் நிறுவனங்கள்
- 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்.
- 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், நம்பிக்கை அலகை இயக்குவதற்கு அனுமதிப் பத்திரம் பெற்ற நிறுவனங்கள்.
- நிதி முகாமைத்துவ கம்பனிகள்.
- 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், பங்குத் தரகர்களாக அல்லது பங்கு விற்பனையாளர்களாக வணிகம் செய்வதற்கு அனுமதிப் பத்திரம் பெற்ற கம்பனிகள்.
- 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கத்திலான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், அனுமதிப் பத்திரம் பெற்ற கம்பனிகள்.
- 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கத்திலான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், அனுமதிப் பத்திரம் பெற்ற ஒரு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள், 1.500 மில்லியனுக்கும் அதிகமான புரள்வு கொண்டவை.
- ஏனைய கம்பனிகள்
  1. 500 மில்லியனுக்கும் அதிகமான புரள்வு கொண்டவை.
  2. கடந்த நிதியாண்டின் இறுதியில், ரூபா 100 மில்லியனுக்கும் அதிகமான பங்குதாரர் மூலதனத்தைக் கொண்டிருந்தது.
  3. இது, கடந்த நிதியாண்டின் இறுதியில், ரூபா 300 மில்லியனுக்கும் அதிகமான மொத்த சொத்துக்களைக் கொண்டிருந்தது.
  4. கடந்த ஆண்டின் இறுதியில் வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களுக்கு ரூபா 100 மில்லியனுக்கும் அதிகமான கடன்பாடுகளைக் கொண்டிருந்தது.
  5. 1000க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டவை.
- பொருட்களை விற்பனை செய்வதிலோ அல்லது சேவைகளை வழங்குவதிலோ ஈடுபட்டுள்ள பொது நிறுவனங்கள்
- கம்பனிகளின் குழுமம், அவற்றில் ஏதேனும் ஒன்று மேற்கண்ட வகைகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் அடங்கும். இந்த நோக்கத்திற்காக, “கம்பனிகளின் குழுமம்” என்பது ஒரு ஹோல்டிங் நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவனங்களைக் குறிக்கும், அவற்றின் கணக்குகள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

கலைச் சொற்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள்
ஒரு நிறுவனம் நிதிக் கூற்று தயாரிப்பதிலும் சமர்ப்பிப்பதிலும் கடைப்பிடிக்கும் குறிப்பிட்ட கோட்பாடுகள், அடிப்படைகள், மரபுகள், விதிகள் மற்றும் நடைமுறைகள்.

காசும் காசுக்குச் சமமானவையும்
அதிக பணப்புழக்கம் கொண்ட முதலீடுகள், அவை எளிதில் அறியப்பட்ட பணத் தொகையாக மாற்றப்படக்கூடியவை மற்றும் அவற்றின் மதிப்பு மாற்றத்திற்கான ஆபத்து மிகக் குறைவானதாகும்.

நடைமுறை விகிதம்
நடப்புச் சொத்துக்கள், நடப்புக் பொறுப்புக்களால் வகுக்கப்படுகிறது.

வீரைவு விகிதம்
நடப்புச் சொத்துக்களிலிருந்து சரக்கு இருப்பு மற்றும் முன்கூட்டியே செலுத்திய தொகைகளைக் கழித்த தொகையை, நடப்புக் பொறுப்புக்களால் வகுக்க வேண்டும்.

தொடர்புடைய தரப்பினர்
வணிகத்தின் நிதி மற்றும் செயற்பாட்டுக் கொள்கைகளைக் கட்டுப்படுத்தவோ அல்லது கணிசமாகப் பாதிக்கவோ கூடிய தரப்பினர்.

SLFRS for SMEs
இலங்கை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கணக்கீட்டு தராதரங்கள்.

CA Sri Lanka
இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம்

IWWG
ஆய்வுக் பட்டறை பணிக்குழு

கடனடைப்பு
அருவச் சொத்தொன்றின் தேய்மானத் தொகையை அதன் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதும் முறையாகப் பகிர்ந்தளித்தல்.

எதிர்பாரா பொறுப்புக்கள்
கடந்த கால நிகழ்வுகளின் காரணமாக இருப்புநிலைக் குறிப்புத் திகதியில் நிலவும் ஒரு நிலை அல்லது சூழல், அதன் நிதி விளைவு பின்வரும் காரணங்களால் அங்கீகரிக்கப்படாமல் உள்ளது:

1. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எதிர்கால நிகழ்வுகள் ஏற்படுவதன் மூலமாகவோ அல்லது,
2. பொருளாதார வளங்களின் சாத்தியமான வெளியேற்றம் எதிர்பார்க்கப்படவில்லை அல்லது,
3. இதை போதுமான நம்பகத்தன்மையுடன் அளவிட இயலவில்லை.

SLFRS/LKAS
இலங்கை நிதி அறிக்கை தராதரங்கள்/இலங்கை கணக்கீட்டு தராதரங்கள

IFIAR
சுதந்திரமான கணக்காய்வு ஒழுங்குமுறையாளர்களின் சர்வதேச மன்றம்

SBEs
குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள்

ISQM
தர முகாமைத்துவம் மீதான சர்வதேச தராதரங்கள்

IFAC
சர்வதேச கணக்காளர்கள் கூட்டமைப்பு

எம்முடன் தொடர்புகொள்ள

முகவரி

பணிப்பாளர் நாயகம்
இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை
3ஆம் மாடி, பைபிள் இல்ல கட்டிடம்
293, காலி வீதி, கொழும்பு - 03, இலங்கை

தொடர்பு இல.

தொலைபேசி:- 011 2301210
தொலைநகல்:- 011 2301211

இணையத்தளம்

https://slaasmb.gov.lk/

செயலாளர்

செக்ரடேரியஸ் (பிரைவேட்) லிமிடெட்
மின்னஞ்சல்:- inquiry@slaasmb.gov.lk

.

இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை
3ஆம் மாடி, பைபிள் இல்ல கட்டிடம், 293, காலி வீதி, கொழும்பு - 03, இலங்கை